# செயல்நிறைவேற்று அறிக்கையும்

# வருடாந்த கணக்குகளும்

**2017 ஆம் ஆண்டுக்கானது**

## வர்த்தக திணைக்களம்

## தலைப்பு 295


*4 ஆவது மாடி, "ரக்ஷன மந்திரய"*
*இல.21, வொக்ஸோல் வீதி,*
*கொழும்பு 02.*

| | |
|---|---|
| *தொலை* | *: 011-2329733 / 2436114* |
| *தொலைநகல்* | *: 011 - 2430233* |
| *மின்னஞ்சல்* | *: fortrade@doc.gov.lk* |
| *இணையம்* | *: www.doc.gov.lk* |

<u>பொருளடக்கம்</u>


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | *அறிமுகம்* | *01* |
| *2* | *இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு - 2017* | *04* |
| *3* | *பல்தரப்பு வர்த்தக உறவுகள்* | 10 |
| *4* | *இருதரப்பு வர்த்தகமும் பொருளாதார ஒத்துழைப்பும்* | 23 |
| *5* | *பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு* | 27 |
| *6* | *வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு* | 32 |
| *7* | *உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் (COOs) வழங்குகை* | 43 |
| *8* | *பதவியினர் இட நகர்வு 2017* | 45 |
| *9* | *வருடாந்த கணக்குகள் 2017* | 48 |

## அட்டவணைகள்


| | பக்கம் |
|---|---|
| இலங்கையின் மொத்த இறக்குமதிகள், மொத்த ஏற்றுமதிகள், மொத்த வர்த்தகம் மற்றும் வர்த்தக மீதி (2010 – 2017) | 06 |
| வர்த்தக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு - 2017 | 33 |
| வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் எண்ணிக்கை - 2015-2017 (உடன்படிக்கை ரீதியாக) | 44 |
| வருடாந்த கணக்குகள் - 2017 | 48 |


## வரைபடங்கள்


| | பக்கம் |
|---|---|
| வர்த்தக திணைக்களத்தின் நிருவாக கட்டமைப்பு | 02 |
| வர்த்தக திணைக்கள உறவுகள் | 03 |
| இலங்கையின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தக தொகுப்பு | 06 |
| வெளிநாட்டு வர்த்தகபோக்கு - 2017 | 08 |
| பதவியினர் இட நகர்வுகள் - 2017 | 45 |

## 1. அறிமுகம்

### ***திணைக்களத்தின் நோக்கு***

*"சர்வதேச வர்த்தக உறவுகளினூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்"*

### ***திணைக்களத்தின் செயற்பணி***

***"இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பயன் மிக்கதான சேவையினை வழங்குவதன் மூலம் மொத்த உற்பத்தி, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதனூடாக வாழ்க்கைத் தரங்களை உயர்த்தி வாழ்வின் அதி உன்னத இடத்தை அடைந்து கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தின் வர்த்தக கொள்கையினை வினைத்திறனுடன் அமுலாக்குவதன் ஊடாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல தரப்பு மட்டங்களில் ஊக்குவித்து விருத்தி செய்தலாகும்."***

வர்த்தக திணைக்களமானது (வ.தி), கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் சர்வதேச வர்த்தக கொள்கை விடயங்களிலும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளினை இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு மட்டங்களில் பேணிக்கொள்வதிலும் மதியுரை வழங்கும் முகவராண்மையென்ற முக்கியமான பாத்திரத்தினை வகித்து வருகின்றது. வர்த்தக கொள்கை மற்றும் ஊக்குவிப்புக்களுடன் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக வர்த்தக திணைக்களத்தினால் பல்வேறு தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வர்த்தக திணைக்களத்தினால் இது தொடர்பில் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய பணிகள் பற்றி சுருக்கமாக கீழே தரப்படுகின்றது.

- உரிய வரிசை அமைச்சுக்கள் / அதிகாரசபைகள் மற்றும் தனியார் துறை அக்கறைதாரர்களுடன் ஒருங்கிணைந்து இலங்கையின் சர்வதேச வர்த்தக கொள்கையினை வகுத்தலும் அமுல்படுத்துதலும்.

- நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியினை விருத்தி செய்யும் வகையில் வெளிநாட்டு வர்த்தக கொள்கை தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல்.

- வெளிநாடுகளிலுள்ள இலங்கை வர்த்தக பிரதிநிதிகளினூடாக வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளிலிலுள்ள இலங்கையின் வர்த்தக நலன்களை ஊக்குவித்தல்.

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக திணைக்களமானது வெளிநாட்டு வர்த்தக துறை தொடர்பான அரசாங்கத்தின் நோக்கு மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தி நோக்கில் மேற்கொள்ளக்கூடிய முக்கியமான பங்களிப்புக்களின் அடிப்படையில் அதன் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளது. அந்தவகையில், 2017 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டம், தற்போதிருக்கும் வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துதல், புதிய சந்தைகளையும் உற்பத்திப் பொருட்களையும் ஊக்குவித்தல், சர்வதேச வர்த்தக முறைமையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வினைத்திறன் மிக்க பங்களிப்பினை ஊக்குவித்தல் மற்றும் தென்னாசிய பிராந்தியத்தில் வர்த்தகத்தில் முன்னணி வகிக்கும் நாடாக இலங்கையை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. வர்த்தக திணைக்களம், அதன் வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவத்தினூடாக நேரடி வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அவ்வாறே இலங்கை சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பதற்குத் தேவையான உதவிகளையும் அவசியமான வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது.

# Organization Chart of Department of Commerce




**Abbreviation**

| | |
|---|---|
| D | Director |
| DD | Deputy Director |
| AD | Asst. Director |
| CRO | Commercial Research Officer |
| DO | Development Officer |
| Mgt. Asst. | Management Asst. |
| KKS | Office Aid |

*Most senior (Director Level) officers are required to be posted as Ambassador/ PR to WTO, Washington, London, Brussels and Karachi.

# எமது உறவுகள்


வரிசை அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள்
உவநி மற்றும் ஏனைய வர்த்தகம் தொடர்பான நிறுவனங்கள்
வர்த்தக மன்றங்கள்
பிராந்திய மற்றும் இருதரப்பு உடன்படிக்கைகள்
ஒத்தி யல்ப ுட ன் செய லாற்
கேந்திர மையம் என்ற வகையில்
வர்த்தக ஊக்குவிப்பு நிறுவனங்கள்
முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகள்
தனியார் துறை
வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மீதான கூட்டு ஆணைக் குழுக்கள்

## 2. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக மீளாய்வு – 2017

2017 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு வர்த்தகப் போக்கானது சந்தை அணுகுமுறையிலான வாய்ப்புக்களையும் குறித்த ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்ட உள்ளக மற்றும் வெளிநாட்டு வர்த்தக சவால்களின் விளைவுகளினையும் தனதாக்கிக் கொண்டுள்ளது. சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்ட மந்தநிலை, வளர்ச்சியடைந்த நாடுகளில் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட மந்தகதி, வர்த்தகப் பங்காளி நாடுகளின் வர்த்தக மற்றும் நாணயக் கொள்கைகளில் எற்பட்ட மாற்றங்கள், புவியியல் சார்ந்த அசாதாரண சூழ்நிலைகள் மற்றும் வர்த்தகப் பங்காளி நாடுகளில் இடம்பெற்ற வர்த்தக எதிர்ப்பு நடவடிக்கைகள் என்பன இங்கையின் வர்த்தகம் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது. 2016 ஆம் ஆண்டின் மத்திய வங்கி அறிக்கை மற்றும் 2025 நோக்கக் கூற்று என்பவற்றில் அடையாளங் காணப்பட்டுள்ள, வர்த்தகப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல்; சர்வதேச ஏற்றுமதியில் பங்கு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்கு என்றவகையில் ஏற்றுமதியில் குறைந்தளவிலான பங்களிப்பு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் மந்தநிலை போன்ற சில விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும், ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தி, உற்பத்தித்திறனை விரிவாக்குதலும் போட்டித் தன்மையினை மேம்படுத்துதலும், பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களை நகர்த்துதல், நலிவடைந்த ஏற்றுமதிப் பொருட் தொகுதியினை விரிவாக்குதல், ஏற்றுமதி நாடுகளினை பல்வகைப்படுத்துதல், சேவை ஏற்றுமதிகளினைக் கண்டறிதல் மற்றும் சர்வதேச சந்தைகளில் ஊடுருவதற்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை விருத்தி செய்தல் என்பன நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சியினை உறுதி செய்வதற்கான உபாய வகுத்தலில் உள்ளக சவால்களாக இருப்பது அடையாளங் காணப்பட்டு கவனத்தில் கொள்ளப்பட்டது.

வெளிநாட்டு வர்த்தகத்தின் எதிர்காலப் போக்கானது 2017 இல் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் நோக்கு 2025 இல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அது இலங்கையினை இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாற்றுவது தொடர்பான பொருளாதார உபாயங்களில் கூடிய கவனம் செலுத்துகின்றது. அது இலங்கையின் தலாவீத வருமானமானத்தினை 5000 அமெரிக்க டொலர் வரையில் அதிகரிப்பதனையும் 1 மில்லியன் புதிய வேலைவாய்ப்புக்களினை வழங்குவதனையும் வருடமொன்றிற்கு 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நேரடி வெளிநாட்டு முதலீடுகளினை பெற்றுக் கொள்வதனையும் நோக்காகக் கொண்டுள்ளதுடன் மேலும், வருடமொன்றிற்கு 20 பில்லியன் பெறுமதியான நடைமுறை ஏற்றுமதிகளினை இரட்டிப்பாக்குவதன் மூலம் அடுத்து வரும் சில ஆண்டுகளில் நாட்டின் வருமானத்தினை உயர் நடுத்தர வருமான மட்டத்திற்குக் கொண்டு வருவதும் நோக்கமாகும்.

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகமானது இந்து சமுத்திரத்தில் ஏற்றுமதி நோக்கிலான பொருளாதார கேந்திரம் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. இத்தகைய இலக்குகளினை அடைவதற்கான பிரதான விடயங்களாக, தற்போதுள்ள சந்தைகளினை விரிவாக்குதல் மற்றும் ஏற்றுமதிகளுக்கான புதிய சந்தைவாய்ப்புக்களினைக் கண்டறிதல், கைத்தொழில் சார்ந்த விடயங்களில் வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் கவருதல் மற்றும் உலகளாவிய பெறுமதி சங்கிலிகளை ஒருங்கிணைத்தல் என்பன அமைகின்றன. எவ்வாறாயினும், தேவையான தரநிர்ணயம் தொடர்பான பிரச்சனைகள்; பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பரஸ்பர அங்கீகார உடன்படிக்கைகள்; இலங்கையின் வெளிநாட்டு ஏற்றுமதிகளினைப் பாதிக்கின்ற வரியல்லா காரணிகள், வியாபார நடவடிக்கைகளினை (WB) இலகுவாக்கும் வகையில் சர்வதேச முதலீடுகளில் உயர் தரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சர்வதேசப் போட்டி (WEF) உள்ளடங்கலான உள்நாட்டு வழங்கல் மற்றும் திறன் கட்டுப்பாடுகள், ஏற்றுமதிப் போட்டிகள் என்றவகையில் அவை தொடர்பில் இன்னமும் தேவையான விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டியுள்ளன.

மீளாய்வு காலப்பகுதியில், அரசாங்க முயற்சிகள் வர்த்தகப் பங்காளிகளுடன் பொருளாதார ஒருங்கிணைப்புக்கள் மற்றும் விருத்தகளினை ஏற்படுத்துதல், உத்தேச வரி நடைமுறைகள் மற்றும் வரி மறுசீரமைப்புக்களை இலகுவாக்குவதனூடாக முதலீட்டாரின் நம்பிக்கையினை

மேம்படுத்துதல், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை விருத்தி செய்தல் மற்றும் வியாபாரத் தொழிற்பாடுகளினை வசதிப்படுத்துதல் என்பவை நோக்கியதாக மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக கொள்கையானது வர்த்தக ஊக்குவிப்பு மற்றும் முதலீட்டினைக் கவரும் வகையிலான இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகளினூடாக தற்போதுள்ள சர்வதேச சந்தைகளிலுள்ள சந்தைப் பங்கினை மேலும் விரிவாக்குவது தொடர்பில் தொடர்ந்தும் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. மீளாய்வு காலப்பகுதியில், ஒருதலைப்பட்டசமாக ஜீஎஸ்பி திட்டத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா போன்ற பிரதான வர்த்தகப் பங்காளி நாடுகளுடனான பேச்சுவார்த்தைகள், இலங்கையின் மீன் எற்றுமதிகளுக்கு ஐரோப்பிய ஆணைக்குழுவினால் (EC) விதிக்கப்பட்ட மீன் ஏற்றுமதித் தடையானது வெற்றிகரமாக நீக்கப்பட்டமை, 2010 ஆகஸ்டில் இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் 2017 மே இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீஎஸ்பி பிளஸ் (EU-GSP+) இனை மீளப் பெறுவதனூடாக ஏறக்குறைய 7,200 பொருட்களுக்கு பூச்சிய தீர்வையினை பெற முடிந்தமை மற்றும் ஐக்கிய அமெரிக்க சந்தையில் பிரயாணப் பொருட்களுக்கு சுங்கத்தீர்வையற்ற முறைமை கிடைக்கப் பெற்றமை என்பவற்றினூடாக மேலும் அதிகமான சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான நிலை தோன்றியுள்ளது. கூட்டு ஆணைக்குழுக்களின் கீழான இருதரப்பு கலந்துரையாடல்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நடவடிக்கைகள் என்பன வர்த்தக ஊக்குவிப்பு தொடர்பில் வர்த்தகப் பங்காளி நாடுகளுடனான பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய விடயங்களுக்குத் தீர்வு காணுதல் என்பவற்றில் முன்னேற்றகரமான சூழ்நிலையினைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கை பங்காளராக இருக்கும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (FTAs) மற்றும் முன்னுரிமைசார்ந்த வர்த்தக உடன்படிக்கைகள் (PTAs) என்பன, முன்னுரிமைகளின் பயன்பாட்டினை அதிகரித்தல் மற்றும் சந்தை அணுகு முறையினை விரிவாக்குதல் ஏன்பவை தொடர்பில் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் (APTA) நான்காவது சுற்றின் நிறைவானது, சீனா மற்றும் தென்கொரியக் குடியரசு ஆகிய நாடுகளில் விரிவாக்கப்பட்ட சந்தை வாய்ப்புக்களினை வழங்குகின்றது.

பல்தரப்பு நோக்கெல்லையில், பல்தரப்பு வர்த்தக முறைமையின் அடிப்படையிலான விதிகளினை ஆதரிக்கின்ற உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடாக இருக்கின்ற இலங்கையானது 2016 மே இல் ஒப்புதலளிக்கப்பட்ட வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் (TFA) அமுலாக்கத்தில் அக்கறையுடன் ஈடுபட்டு வருகின்றது. சுமுகமான வர்த்தகச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்குத் தடையாகவுள்ள குறுக்கு எல்லையினை இல்லாதொழிக்கும் பொருட்டு வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் கீழான இலங்கையின் இணக்கப்பாடுகளின் அறிவிப்புக்கள் மற்றும் அமுலாக்கல்கள் என்பன 2017 இலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. மீளாய்வு காலப்பகுதியில், ஒருமித்த நடைமுறைகள் மீதான கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் வர்த்தகச் செலவுகளைக் குறைக்குமென எதிர்பார்க்கும் “வர்த்தக இணையத்தளம்” உருவாக்கம் மற்றும் ஏற்றுமதி போட்டிகளில் ஏற்பட்ட முன்னேற்றம், என்பன துரிதமாக முன்னேற்றமடைந்துள்ளன. இலங்கையில் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாதுள்ள குவிப்பெதிர்ப்பு, எதிரீட்டு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு சட்டவாக்கத்தினை சட்டமாக்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள், மீளாய்வு காலப்பகுதியில் சந்தையிலுள்ள நியாயமற்ற போட்டி நடவடிக்கைகளிலிருந்து உள்ளூர் கைத்தொழிலாளர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.

**மொத்த இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் வர்த்தக மீதி : 2010 – 2017**
**(மில்.அ.டொலர் பெறுமதியில்)**

| ஆண்டு | ஏற்றுமதிகள் | வளர்ச்சி% | இறக்குமதிகள் | வளர்ச்சி% | மொத்த வர்த்தகம் | வர்த்தக மீதி |
|---|---|---|---|---|---|---|
| 2010 | 8,294 | 16.5 | 12,340 | 26.4 | 20,634 | -4,047 |
| 2011 | 10,018 | 20.8 | 19,703 | 59.7 | 29,721 | -9,685 |
| 2012 | 9,181 | -8.4 | 17,889 | -9.2 | 27,069 | -8,708 |
| 2013 | 10,009 | 9.0 | 17,098 | -4.4 | 27,107 | -7,088 |
| 2014 | 11,044 | 10.3 | 19,246 | 12.6 | 30,290 | -8,202 |
| 2015 | 10,212 | -7.5 | 18,989 | -1.3 | 29,201 | -8,777 |
| 2016 | 10,217 | 0.048 | 19,515 | 2.77 | 29,732 | -9,298 |
| 2017 | 11,411 | 11.69 | 21,324 | 9.27 | 32,735 | -9,913 |

*மூலம்: இலங்கைச் சுங்கம்*

## 2.1 ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயல்நிறைவேற்றம்




2017 ஆண்டு காலப்பகுதியில், இலங்கையின் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியமானது 11,411 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளதுடன் 2016 இல் அதன் பெறுமதி 10,217 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி சம்பாத்தியங்களில் தைத்த ஆடைகளே முன்னிலை வகிப்பதுடன் மொத்த ஏற்றுமதி சம்பாத்தியத்தில் 47% ஆக இருப்பதுடன் 2016 உடன் ஒப்பிடுகையில் சிறியளிவிலான வீழ்ச்சியினையும் (3%) பதிவு செய்துள்ளது. 2017 இல் இரண்டாவது மிகப் பெரிய ஏற்றுமதியாக

தேயிலை விளங்கியுள்ளதுடன் (16%) அதனைத் தொடர்ந்து திண்ம மற்றும் ஏனைய ரயர்கள் (8%), கனியப் பொருட்கள் (2%) மற்றும் கப்பல், படகு மற்றும் மிதவைக் கட்டமைப்புக்கள் (2%) ஆகவும் காணப்பட்டன.




2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவினம் 19,515 மில்லியன் அ.டொலருக்கு அதிகரித்துள்ளதுடன் இது 2016 இல் 21,324 மில்லியன் அ.டொலராக இருந்துள்ளதுடன் 2017 இல் 9.27% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது.

2017 இல் இலங்கையின் இறக்குமதிக் கூடையானது கனிய மற்றும் கனிய உற்பத்திப் பொருட்களின் 15% பங்களிப்புடன் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. ஏனைய பிரதான இறக்குமதிப் பொருட்களினுள் இயந்திரங்கள் மற்றும் உபகரணம் (8%), வாகன உதிரிப்பாகம் (7%), மின்சார இயந்திரம் மற்றும் உபகரணம் (6%) மற்றும் துணியும் பருத்தியும் (4%) என்பனவும் உள்ளடங்குகின்றன.

## 2.2. ஏற்றுமதி இறக்குமதி போக்கு 2017









| ஏற்றுமதிகள்(%) | |
|---|---|
| ஐ.ஒ. | 29.11 |
| ஐ. அ | 25.52 |
| இந்தியா | 6.00 |
| சீனா | 3.6 |
| ஐ.அ.எ | 2.40 |

| இறக்குமதிகள்(%) | |
|---|---|
| இந்தியா | 21.08 |
| சீனா | 19.65 |
| ஐ.ஒ. | 08.34 |
| ஜப்பான் | 04.87 |
| ஐ.அ. | 03.80 |

## 3. பல்தரப்பு வர்த்தக உறவுகள்

இலங்கையின் பலதரப்பு வர்த்தக உறவுகள் உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) உடன்படிக்கைகள் மீது கூடிய அக்கறையினைக் காட்டியுள்ளன. இலங்கையானது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD), உலக புலமைச் சொத்துக்கள் நிறுவனம் (WIPO), சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் WTO சட்டவிதிக்கான மதியுரை நிலையம் (ACWL) ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றது.

### 3.1 உலக வர்த்தக நிறுவனத்தில் இலங்கையின் பிரதிநிதித்துவம்

பியூனோஸ் அயர்ஸில் டிசம்பரில் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்காக எடுக்கப்பட வேண்டிய முன்மொழிவுகளினை உறுதிப்படுத்தும் வகையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்கைளின் முன்னேற்றத்தினைக் கவனத்தில் கொள்ளாது 2017 ஆம் ஆண்டுக்கான அமைச்சர்கள் மட்டத்திலான 11 ஆவது மாநாடு ஆரம்பிக்கப்பட்டது. உலக வர்த்தக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், திரு.ரொபேர்டோ அஷிவேடோ வருடத்தின் ஆரம்பத்தில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் இது தன்னுடைய நான்கு வருட காலப்பகுதியினைக் கொண்ட தவணையின் இரண்டாவது தவணையாகும் எனத் தெரிவித்துடன் பல்தரப்பு வர்த்தக முறைமையினைப் பார்க்கின்ற உறுப்பினர்கள் உலக வர்த்தக நிறுவனம் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் குறித்து பேசுமாறு உற்சாகப்படுத்தினார். மேலும், அவர் உலக வர்த்தக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார அபிவிருத்தி ஆதரவு, வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் போன்ற விடயங்கள் குறித்து வியப்படைந்துள்ளதாகவும் அதுமட்டுமல்லாமல் சமாதானம், ஒத்துழைப்பு மற்றும் நாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வு என்பன குறித்தும் கவனம் செலுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கோடை விடுமுறையின் பின்னர், விவசாய பொது சரக்கிருப்பு (PSH),விவசாய உள்நாட்டு ஆதரவு (DS), விவசாய உற்பத்திகள் மீதான ஏற்றுமதி தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மற்றும் சேவைகள் உள்நாட்டு ஒழுங்குவிதிகள் அவ்வாறே இ- வர்த்தகம், முதலீட்டு வசதிப்படுத்தல்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், விவசாயமல்லா சந்தை அணுகுமுறை (NAMA) மற்றும் மேன்முறையீடு தொடர்பான நிறுவன நியமனங்கள் போன்ற நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள பல்வேறு பிரச்சனைகள் தொடர்பில் எழுத்து மூலமான தமது முன்மொழிவுகளினைச் சமர்ப்பிக்க ஆரம்பத்துள்ளனர். மீன்பிடி உதவுதொகைகள் வழங்கும் முறை தொடர்பான பேச்சுவார்த்தைகள் உறுப்பினர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 07 எழுத்துமூலமான முன்மொழிவுகளின் அடிப்படையில் ஆண்டு முழுவதும் நடாத்தப்பட்டன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், ஜெனிவாவிலுள்ள உலக வர்த்தக நிறுவனத்திற்கான இலங்கைத் தூதரகமானது, பல்தரப்பு வர்த்தக சந்திப்புக்களின் போது அதன் வர்த்தக பங்காளி நாடுகளுடன் இலங்கையுடனான இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதுடன் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், சுவிற்சலாந்து, மெக்ஸிக்கோ, பராகுவே, ஜமைக்கா, கம்போடியா, சியரா லியோன் மற்றும் நைஜீரியா போன்ற நாடுகளின் வர்த்தக கொள்கை மீளாய்வுக் கூட்டங்களில் அது தொடர்பில் கருத்துக்களையும் தெரிவித்தும் உள்ளது. உலக வர்த்தக நிறுவன / நிரந்தர பிரதிநிதியும் எதிர்காலத்தில் இலங்கையானது கொடை உதவுகையினைக் கோருமிடத்து இலங்கையானது எற்கனவே பயனடையப் பெற்ற உள்ளார்ந்த விடயங்களிலிருந்து கொடை உதவுகை நிகழ்ச்சித்திட்டம் குறித்து விளக்கமளிக்கவுள்ளதுடன், வர்த்தக அலகுக்கான விசேட உதவிக் கோரிக்கையினை உலக வர்த்தக நிறுவனத்தின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி தொடர்பான குழுவின் வர்த்தக அமர்வில் கூற்றாகவும் தெரியப்படுத்தியுள்ளார். கூட்டமானது கொடை வழங்கும் நாடுகளினாலும் அவ்வாறே பல்வேறு கொடை வழங்கும் நிறுவனங்களினாலும் சிறப்பாக நடாத்தப்பட்டது.

## 3.2 உலக வர்த்தக நிறுவனத்தின் 11 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு

உலக வர்த்தக நிறுவனத்தின் 11 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு ஆர்ஜென்டினாவின் புயூனெஸ் எயார்ஸ் நகரில் 2017 டிசம்பர் 10 இலிருந்து 13 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டது. 11 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில், பின்வரும் விடயங்களில் சாத்தியமான தீர்மானங்களினை நோக்கிப் பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டனர்:

(i) **விவசாயம் –** பேச்சுவார்த்தைகளானவை விவசாயத் துறையில் உலக வர்த்தக சுயாதீனத்தை மேலும் விரிவாக்கும் நோக்குடன் உள்நாட்டு ஆதரவினைக் குறைத்தல், அபிவிருத்தயடைந்து வரும் நாடுகளுக்கு விசேட பாதுகாப்பினை வழங்குதல், பொதுமக்கள் கையிருப்பினை வைத்திருத்தல் போன்ற பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வினைக் காண்பதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன.

(ii) **மீன்படி உதவுதொகைகள்** – மீன்படி உதவுதொகைகளினைப் பொறுத்தவரையில், அமைச்சர்கள் சட்ட, முறைப்படுத்தப்படாத மற்றும் அதிகாரமளிக்கப்படாத மீன்படி (IUU) என்பவற்றிற்கான உதவு தொகைளினை தடை செய்வதற்கான ஆகக்குறைந்தது பல்தரப்பு நெறிமுறைகளினைப் பின்பற்றுவதற்கான தீர்மானங்களை எடுப்பார்களென எதிர்பார்க்கப்பட்டனர்.

(iii) **அபிவிருத்தி –** பேச்சுவார்த்தைகளில் பல்தரப்பு வர்த்தக விதிமுறைகளினை பிரயோகம் தொடர்பில் விசேட மற்றும் பல்தரப்பு முறைகளுக்காக அபிவிருத்தியடைந்துவரும் மற்றும் குறைவிருத்தி நாடுகள் என்பவற்றின் கோரிக்கைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

(iv) **இ- வர்த்தகம் –** சாத்தியமான பல்தரப்பு சட்டவிதிகள் தொடர்பான தற்போதைய உலக வர்த்தக நிறுவன இ-வர்த்தக வேலை நிகழ்ச்சித்திட்டத்தினை வலுப்படுத்துவதா இல்லையா என்பதனைத் தீர்மானிப்பதற்குக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

(v) **சேவைகள்,** சேவைகளில் உள்நாட்டு ஒழுங்குவிதிகளுக்கானபுதிய ஒழுங்குமுறைகள் உள்ளன.

(vi) **முதலீட்டு வசதிப்படுத்தல் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்** (MSMEs) மீதான பேச்சுவார்த்தைகள் போன்ற உத்தேச புதிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி அமைச்சரவைத் தீர்மானங்களை அடையப் பெறுதல்.

எவ்வாறாயினும், மாநாட்டில், பொதுவான அமைச்சர்கள் மட்டத்திலான வெளிப்படுத்துகையில் உடன்பாடோ அல்லது நிலையான விடயங்களில் தீர்மானம் எதுவுமோ எடுக்கப்படவில்லை. மாநாடானது பின்வருவனவற்றினைக் கொண்டுள்ள MC11 நடைமுறைகள் உள்ளடங்கலான தலைவரின் பொழிப்புடன் நிறைவு பெற்றது:

1. 2019 இல் நடைபெறுவுள்ள அடுத்த அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மீன்பிடி உதவுதொகைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளினைத் தொடருதல்;
2. இலத்திரனியல் தகவல் பரிமாற்றங்கள் மீது மீது வரிகளினை விதிப்பதற்கு நாடுகள் உடன்படாமையினால் இலத்திரனியல் வர்த்தகத்தின் கீழான வேலைத்திட்டத்தினைத் தொடருதல் மற்றும் இ- வர்த்தகம் தொடர்பான புதுப்பித்தலினை தற்காலிகமாக இடைநிறுத்துதல்;
3. TRIPS இன் கீழ் வன்முறையல்லத விடயங்களினைக் கொண்டு வராமைக்கு உடன்பட்ட உறுப்பு நாடுகளில், வர்த்தகத்துடன் தொடர்புடைய புலமைச் சொத்து உரிமைகள் தொடர்பான விடயங்கள் தொடர்பில் உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கையின் கீழ்

விதிமுறைகள் மீறப்படாததும் முறைப்பாடுகளினைக் கொண்ட சூழ்நிலையினை இடைநிறுத்தலினைப் புதுப்பித்தல்.

புதிய வேலைத்திட்டங்கள் இன்மையால், மாநாட்டில் மூன்று நாட்களுக்கு மேலாக ஏனைய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் அமைச்சர்கள் முன்னைய அமைச்சரவையின் அதிகாரங்களினை ஏற்றுக் கொண்டுள்ளதுடன், Buenos Aires இற்கு கொண்டு வரப்பட்ட நடைமுறை முன்மொழிவுகள் உலக வர்த்தக நிறுவனத்தின் எதிர்கால வேலைகளின் தொடர்ச்சிக்கான உசாத்துணையாக இருக்கும்.

உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்புரிமையினைக் கொண்டுள்ள ஏனையோர்களினால் சாதகமான பதில்கள் அளிக்கப்படாமையினால், உறுப்பினர்களின் பல்வேறு குழுக்கள் இ-வர்த்தகம், முதலீட்டு வசதிப்படுத்தல் அவ்வாறே சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பான விடயங்களில் ஆர்வமுடைய அங்கத்தவர்களுக்கிடையே புத்தாய்வு முறையிலான கலந்துரையாடல்களினை ஆரம்பிப்பதனைக் குறிப்பிடுகின்ற கூட்டு அமைச்சரவைக் கூற்றுக்களினை வழங்கியுள்ளார்கள்.

அமைச்சரவை கூட்டங்களின் பகுதியாக, இலங்கைத் தூதுக்குழுவானது குழு 33 (G-33), சிறிய மற்றும் நலிவடைந்த பொருளாதாரங்கள், IGDCs, இ-வர்த்தக நண்பர்கள் (FEDs), அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் முறைசாரக் குழு (SVEs), எனும் பெயரிலான ஒத்திசைவான குழுக்களின் சிறிய அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டங்களில் ஆர்வத்துடன் பங்குபற்றியுள்ளது.

அத்துடன், உலக வர்த்தக நிறுவனத்திற்கான நிரந்தர பிரதிநிதி, இலங்கையில் பல்வேறு நாடுகளினை ஒருங்கிணைப்பது தொடர்பான நாட்டுக்குரிய கருத்திட்டம் மீதான வர்த்தக வசதிப்படுத்தலுக்கான சர்வதேச கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வில் உரையாற்றினார்.

### 3.3 மீன்பிடி உதவுதொகைகள் மீதான புதிய பல்தரப்பு ஒழுங்குமுறைகள்

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்கு 14.6 ஆனது, அளவுக்கதிகமான அதிகளவிலான மீன்பிடிக்கு பங்களிப்பினை வழங்குகின்ற குறித்த சில மீன்பிடி உதவுதொகைகளின் வடிவங்களினை தடை செய்வதற்கும் சட்டவிரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்கமைக்கப்படாத மீன்பிடி (IUU) என்பனவற்றிற்கு பங்களிப்புச் செய்கின்ற உதவு தொகை வழங்கப்படுதலினை இல்லாமால் செய்தல், மற்றும் 2020 ஆம் ஆண்டளவில் அத்தகைய புதிய உதவு தொகைகளினை அறிமுகப்படுத்துவதனை தவிர்த்தல் போன்றவற்றினை முன்னிறுத்துகின்றது.

கடல்சார் மூலவளங்களினைப் பாதுகாப்பு மற்றும் வலுவாதாரம் என்பவற்றில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற அத்தகைய காரணிகளினைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளினை அறிமுகப்படுத்துவதற்கான பொறுப்பு உலக வர்த்தக நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உலக வர்த்தக உறுப்பு நாடுகளினால் சட்ட ரீதியான கட்டுப்பாடுகளினைக் கொண்டதான இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் பொருட்டு, மீன்பிடித் துறையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற காரணிகள் தொடர்பில் MC11 அமைச்சரவைத் தீர்மானத்திற்கான உடன்படிக்கையினை விருத்தி செய்யும் நோக்குடன் உலக வர்த்தக நிறுவன விதிகள் தொடர்பில் பேச்சுவார்த்தைக் குழுவில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. உத்தேச நிதியுதவி வழங்கும் முறைகள் கீழ்க்காணும் மூன்று (03) விடயங்களில் கவனம் செலுத்தப்படவுள்ளன.

(அ) IUU மீன்பிடிக்கு பங்களிப்பினை வழங்கும் நிதி உதவுகைகள்

(ஆ) மிகைத் திறனுக்கு பங்களிப்பினை வழங்கும் நிதி உதவுகைகள்

(இ) அளவுக்கு அதிகமான மீன்பிடி மற்றும் அளவுக்கதிகமான மீன்பிடி இருப்புக்களுக்கு பங்களிப்பினை வழங்கும் நிதி உதவுகைகள்

உலக வர்த்தக நிறுவன உறுப்பினர்கள், MC 11 இல் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வேறுபட்ட உரை வடிவிலான முன்மொழிவுகளினை சமர்ப்பிப்பதன் மூலம் பேச்சுவார்த்தைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

அமைச்சரவைத் தீர்மானத்தின் வரைபு தொடர்பில் உறுப்பினர்கள் உடன்பாட்டிற்கு வரத் தவறியமையால், Buenos Aires இல் இடம்பெற்ற MC11 இல் மீன்பிடி உதவுதொகைகள் தொடர்பான தற்போதைய வெளிப்படையான முறைமையினை மேம்படுத்துதல் மற்றும் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட பணியினைத் தொடர்ந்து முன்னெடுத்தல் தொடர்பில் தீவிரமான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இலங்கைத் தூதரகமானது, நாட்டின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் அனைத்து அக்கறைதாரர்களின் நெருங்கிய ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்புடன் வருடம் முழுவதும் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள்.

## 3.4 இலத்திரனியல் வர்த்தக மற்றும் தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கை

வர்த்தகத்திற்கான இ- வர்த்தகம் மற்றும் அதன் அமுலாக்கமானது உலக வர்த்தக நிறுவன நிகழ்ச்சிநிரலில் வெளித் தோன்றுகின்ற விடயங்களில் ஒன்றாகும். 1998 செப்ரெம்பரில் பொதுக் குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தினை அமுலாக்குவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ள உலக வர்த்தக நிறுவன அமைப்புக்களினால் சமர்ப்பிக்கப்படக்கூடிய அறிக்கைகளின் அடிப்படையில் குறித்த காலப்பகுதிகளுக்குரிய மீளாய்வுகள் நடாத்தப்பட வேண்டுமென பொதுக்குழுவிற்கு அறிவுறுத்தப்பட்ட நைரோபி அமைச்சர்கள் மட்டத்திலான வெளிப்படுத்துகையில் அழுத்தம் கொடுக்கப்பட்டது.

பல்வேறு உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடுகள் இ-வர்த்தக கலந்துரையாடல்களில் கணிசமானளவு ஆர்வத்தினைக் கொண்டிருந்ததுடன் இத்தகைய ஆர்வமுடைய தூதுக்குழுக்களினால் பல்வேறு முன்மொழிவுகளும் முன்மொழியப்பட்டன. அபிவிருத்திக்கான உலக வர்த்தக நண்பர்கள் (FED), இலங்கையும் ஒரு உறுப்பினராகவுள்ள 14 உலக வர்த்தக நிறுவன உறுப்பினர்களில் ஒருமித்த சிந்தனையினைக் கொண்ட குழு ஆகியன அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்தி தொடர்பில் முக்கியத்துவம் பெறும் இ-வர்த்தக பங்களிப்பு தொடர்பான அதன் அபிலாசைகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளதுடன் அதற்கமைவாக அக்கறையுடன் செயற்பட்டுள்ளன. அபிவிருத்திக்கான உலக வர்த்தக நண்பர்களினால் 2017 மார்ச் 13 ஆம் திகதியன்று ஏற்பாடு செய்யப்பட்ட “இ-கொடுப்பனவுகளும் நிதிசார் உள்ளடக்கமும்” எனும் தலைப்பிலான கருத்தரங்கில் அதிகளவிலான உறுப்பு நாடுகள் பங்குபற்றியிருந்தன.
2017 பெப்ரவரியில் டாவோஸில் நடாத்தப்பட்ட உலக பொருளாதார மாநாட்டின் போது இடம்பெற்ற பாகிஸ்தான், ஆர்ஜென்டீனா, கொஸ்தா ரிகா மற்றும் நைஜீரியாவினைச் சேர்ந்த வர்த்தக அமைச்சர்களின் சிறியளவிலான அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்திற்கு அமைவாக, அபிவிருத்திக்கான உலக வர்த்தக நண்பர்கள் (FED) அமைப்பானது அங்ராட் இ-வர்த்தக வாரத்திற்கு இணையாக 2017 ஏப்பிரல் 25 ஆம் திகதியன்று ஜெனிவாவில் அபிவிருத்திக்கான உலக வர்த்தக நண்பர்கள் (FED) அமைச்சர்கள் மட்டத்திலான முதலாவது கூட்டத்தினை எற்பாடு செய்திருந்தார்கள். இலங்கையின் சார்பில் உலக வர்த்தக நிறுவனம் / நிரந்தர பிரதிநிதி கலந்து கொண்டதுடன் கொழும்பிலிருந்து வேறு இவரும் இதில் கலந்து கொள்ளவில்லை. உலக வர்த்தக நண்பர்கள் (FED) அமைச்சர்கள், அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் குறைவிருத்தி நாடுகளுக்கான அபிவிருத்தித் தீர்வுகளினை கொண்டு வருவதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தொன்றாக இ-வர்த்தகம் அமைகின்றது என்பதனை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் நிலையான பொருளாதார அபிவிருத்திக்கான அடித்தளமென நம்புகின்ற ஏழு பிரதான விடயங்களுக்கான தீர்வினை முன்வைப்பதற்கும் இணங்கிக் கொண்டார்கள். இத்தகைய பிரதான விடயங்கள் இ-வர்த்தக தயார் நிலைக்கான உபாயங்களினை அடையாளங் காணுதல்; இ-வர்த்தக தயார்ப்படுத்தலுக்கான

உபாயங்களை அடையாளங் காணுதல் ; ICT உள்ளக கட்டமைப்பு மற்றும் சேவைகளினை அணுகுதல்; வர்த்தக ஏற்பாடுகள் மற்றும் வர்த்தக வசதிப்படுத்தல்; இ-கொடுப்பனவு தீர்வு முறைகள்; சட்ட உறுதிப்பாடு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டநடைமுறைகள்; திறன்விருத்தி மற்றும் தொழில்நுட்ப உதவுகை; மற்றும் நிதியிடல் அணுகுமுறை ஆகியவற்றினை உள்ளடக்குகின்றன.

## 3.5 உரிமக் காப்பளிக்கப்பட்ட மருந்து வகைகளின் பொதுவான முறைகளுக்கு சட்ட உறுதிப்பாட்டினை வழங்கும் உலக வர்த்தக நிறுவன TRIPS உடன்படிக்கையின் திருத்தம்.

2005 இல் அடையப்பெற்ற உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடுகளின் உடன்பாட்டினைத் தொடர்ந்து, புலமைச் சொத்து மீதான உடன்படிக்கையின் திருத்தமானது 2017 ஜனவரி 23 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது. இந்த திருத்தமானது மட்டுப்படுத்தப்பட்ட அல்லது மருந்தாக்கல் உற்பத்தித் திறனல்லாத நாடுகளுக்கு ஏற்றுமதிக்கான விசேட கட்டாய உரிமங்களின் கீழ் உற்பத்தி செய்யப்படக் கூடிய உரிமக் காப்பளிக்கப்பட்ட மருந்துகளின் பொதுவான முறைகளுக்கு சட்ட ரீதியான உறுதியினை வழங்குகின்றது. 2015 செப்ரெம்பர் 07 ஆம் திகதியன்று இலங்கையானது அமைச்சரவையிடமிருந்து கிடைக்க வேண்டிய இசைவாணையினைப் பெறுவது தொடர்பில் அதன் ஒப்புதல் ஆவணத்தினை வைப்பிலிட்டுள்ளது.

உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடுகள் வறிய நாடுகளிலுள்ள மக்களின் பொது சுகாதார தேவைகளுக்கு உலகளாவிய வர்த்தக முறைமை விதிகளினைக் கடைப்பிடிப்பதற்காக விசேடமாக TRIPS உடன்படிக்கையினைத் திருத்துவதற்கு இத்தகைய தீர்மானத்தினை எடுத்திருந்தன. இது மருந்தாக்கல் உற்பத்தித் திறனின்றி நாடுகளின் தேவைகளினைத் திருப்திப்படுத்தும் வகையில் நியாயமான விலைகளில் பொதுவான மருந்து வகைகளின் ஏற்றுமதிக்கான சட்ட உறுதிப்பாட்டினை அல்லது HIV/AIDS, காச நோய் அல்லது மலேரியா அதுபோன்ற கொள்ளை நோய் போன்ற நோய்களுக்கான உதவி வழங்கலில் மட்டுப்படுத்தலினை வழங்குகின்றது. திருத்தமானது உள்ளார்ந்த ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு பாதுகாப்பானதும் நிலையானதுமான சட்ட ஆதாரத்தினை வழங்குகின்றது.

தற்போது மருந்தாக்கல் துறையில் மட்டுப்படுத்தப்பட்ட தயாரிப்புத் திறனை மட்டும் கொண்டுள்ள இலங்கையானது, கொள்ளை நோய் அல்லது இயற்கை அனர்த்தம் போன்ற ஏதேனும் மருத்துவ அவசரகால நிலைமைகளின் போது உலகளாவிய ரீதியிலான எவரேனும் போட்டி வழங்குனர்களிடமிருந்து விலை உயர்ந்த காப்பளிக்கப்பட்ட மருந்து வகைகளின் பொதுவான மாற்று வடிவங்களினை அநுமதிக்கும் இத்தகைய நெகிழ்வுத் தன்மைகளிலிருந்தான பயன்களினைப் பெறுகின்றது.

மேலும், இலங்கையானது உத்தேசிக்கப்பட்டுள்ள மருந்தாக்கல் தயாரிப்பு வலயமொன்றினைத் தயாரிப்பதற்குப் போதுமான திறன் வசதியினைக் கொண்டதாகவும் இத்துறையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களினை கவரும் வகையில் தாபிக்கப்பட்டதும் எதிர்காலத்தில் இலங்கையானது இன்னொரு உறுப்பு நாட்டில் நிலவும் அவசரகால நிலைமையின் போது வழங்குவதற்காக ஏதேனும் காப்புரிமை பெறப்பட்ட மருந்தினைப் பொதுவான முறைகளில் தயாரிப்பதற்கான நெகிழ்வுத்தன்மையினை பயன்படுத்துவதற்கும் எண்ணியுள்ளது.

## 3.6 உலக வர்த்தக நிறுவனத்தின் வர்த்தக மீளாய்வு முறைமைக்கான திருத்தங்கள்

உறுப்பினர்களின் வர்த்தக கொள்கைகள் மற்றும் நடைமுறைகளினை மீளாய்வு செய்யும் பொருட்டு வர்த்தக கொள்கை மீளாய்வு முறைமையின் ஆறாவது மதிப்பீடானது (TPRM) உலக வர்த்தக நிறுவனத்தில் இடம்பெற்றது. இது தொடர்பில் நடாத்தப்பட்ட, வர்த்தக கொள்கை மீளாய்வு அமைப்பின் (TPRB) கூட்டத் தொடர்களின்னைத் தொடர்ந்து, பின்வரும் மீளாய்வுகள் அங்கீகாரத்திற்காக பொதுக் குழுவிற்கு முன்மொழியப்பட்டன.

- முதல் நான்கு வர்த்தக உறுப்பினர்கள் (உலகளாவிய பிரதான நான்கு வர்த்தக உறுப்பினர்கள்) – தற்போதுள்ள இரண்டு வருட சுழற்சியானது மூன்று வருடங்களாக திருத்தியமைக்கப்படவுள்ளது.
- அடுத்த பதினாறு வர்த்தக உறுப்பினர்கள் – தற்போதுள்ள நான்கு வருட சுழற்சியானது ஐந்து வருடங்களாக திருத்தியமைக்கப்படவுள்ளது.
- ஏனைய அனைத்து உறுப்பினர்கள் – தற்போதுள்ள ஆறு வருட சுழற்சியானது ஏழு வருடங்களாக திருத்தியமைக்கப்படவுள்ளது.

உலக வர்த்தக நிறுவன பேரவையானது, கோடைக்கால விடுமுறைகு முன்னதாக நடாத்தப்பட்ட அதன் கூட்டத்தில் இத்தகைய திருத்தங்களுக்கு (WT/Let/1276) அதன் அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. அதற்கிணங்க, இத்தகைய திருத்தங்கள் 2019 ஜனவரி 01 இலிருந்து பயனுறுதியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. திருத்தப்பட்ட ஏற்பாடுகளின்படி, இலங்கையின் அடுத்த வர்த்தக கொள்கை மீளாய்வானது 2023 இல் மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலாக, உறுப்பினர்கள் வர்த்தக கொள்கை மீளாய்வுகளின் வினா மற்றும் விடையளித்தலுக்கான கால வரையறையினை மீளாய்வு செய்வதற்கும் உடன்பட்டுக் கொண்டுள்ளதுடன், இதனால் மீளாய்வு காலப்பகுதியில், ஏனைய உறுப்பினர்களுக்கு எழுத்து மூலம் விரைவாக விடையளிக்க வேண்டியவர்களுக்கு அவற்றிற்கான விடைகளினைத் தயார் செய்வதற்காக மேலும் ஒரு வாரம் வழங்கப்படும். மேலும், வர்த்தக கொள்கைகளின் வெளிப்படைத் தன்மையினை விரிவாக்கும் பொருட்டு, வர்த்தக மீளாய்வுக் கூட்டங்களில் அவற்றின் கொள்கைளில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் குறித்து விரிவான அறிக்கைளினை வழங்கும் பொருட்டு உறுப்பினர்களுக்கு முறையான செயல்முறையொன்றினை ஏற்படுத்தும் வகையில் உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டது. இவைகள் இன்னமும் நிறைவு பெற்றிருக்காதிருப்பதுடன் TPRB இலுள்ள அனைத்து உறுப்பினர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவுமில்லை.

### 3.7 வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD):

### 3.7.1 UNCTAD – முதலீடு, புத்தாக்கம் மற்றும் உற்பத்தித் திறன் விருத்தி மற்றும் நிலையான அபிவிருத்தி, ஐந்தாவது அமர்வு என்பவற்றின் மீதான பல்லாண்டு நிபுணர் கூட்டம்

"முதலீடு, புத்தாக்கம் மற்றும் உற்பத்தி திறன்விருத்தி மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான உயர்மட்ட சர்வதேச முதலீட்டு உடன்படிக்கைகள் மாநாடு" தொடர்பான அங்ராட்டின் வருடாந்த கூட்டம் ஜெனிவாவில் 2017 ஒக்டோபர் 09 – 11 வரையில் நடாத்தப்பட்டது. உலக வர்த்தக நிறுவனத்திற்கான இலங்கையின் நிரந்த பிரதிநிதி / தூதுவர், சர்வதேச முதலீட்டு ஒப்பந்தங்களின் மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடுவதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தின் இந்த ஐந்தாவது அமர்வுக்குத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

மாநாட்டில் உலகெங்குமுள்ள நிபுணர்களிலிருந்து 200 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். தூதுவர் உலக வர்த்தக நிறுவனத்திற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியும் கலந்து கொண்டிருந்தார். ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் தூதவர் / நிரந்தரப் பிரதிநிதி, இலங்கை முதலீட்டுச் சபையின் ஆராய்ச்சி மற்றும் கொள்கை வகுப்புப் பிரிவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் முதலாவது செயலாளர் (வர்த்தக) ஆகியோர் இந்தக் கூட்டத்தில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டார்கள். முன்னறிவிக்கப்படாத அமர்வின் குழு உறுப்பினராக மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கை முதலீட்டுச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சர்வதேச முதலீட்டு உடன்படிக்கைகளினை மறுசீரமைப்பது தொடர்பில் இலங்கையின் அனுபவங்கைளப் பகிர்ந்து கொண்டார்.

### 3.7.2 தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுக்களுக்கான சர்வதேச மாநாடு

அங்ராட்டானது ITC, உலக வங்கி குழு, உலக சுங்க நிறுவனம் மற்றும் உலக வர்த்தக நிறுவனம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுக்களுக்கான முதலாவது சர்வதேச மாநாட்டினை ஏற்பாடு செய்த அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் குறைவிருத்தி நாடுகளினை மறுசீரமைப்புச் செய்யும் வர்த்தக வசதிப்படுத்தலுக்கு ஆதரவளிப்பதற்கான அதன் முயற்சிகளினைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளது. மாநாடானது ஜெனிவாவில் 2017 ஜனவரி 23-27 வரையில் நடாத்தப்பட்டுள்ளதுடன் 70 நாடுகளிலிருந்து 300 இற்கும் அதிகமான பங்குபற்றாளர்கள் இதில் கலந்து கொண்டார்கள். இலங்கை தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுக்களுக்கான இந்த மாநாட்டில் இலங்கைச் சுங்கம், வர்த்தக திணைக்களம் மற்றும் சர்வதேச வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

### 3.7.3 இலங்கையில் இ-வர்த்தகத்தின் தயார் நிலையினை மதிப்பீடு செய்தல்

ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதுக்குழுவானது, இ-வர்த்தக உள்ளக கட்டமைப்பினை விருத்தி செய்வதில் இலங்கை நோக்கி கொடையாளர்களின் கவனத்தினைக் கவருதல் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக சூழலில் ஏற்படும் மாற்றத்திலிருந்து பயனைப் பெறும் நோக்குடன் UNCTAD மற்றும் உலக வங்கி குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களினை ஆரம்பித்துள்ளது.

இந்த விடயத்தில், மிகவும் முக்கியமான விடயம் நாட்டின் இ-வர்த்தக தயார் நிலையினை மதிப்பீடு செய்வதும் தற்போதுள்ள இடைவெளிகளை இனங்காண்பதுமேயாகும். அதாவது இலங்கையில் அரசாங்க வர்த்தக விருத்தித் தேவைப்பாடுகளை இனங்காண்பதேயாகும்

இந்த விடயத்தில், வர்த்தக வசதிப்படுத்தலுக்கான ஏற்பாடு, டிஜிற்றல் கொடுக்கல் வாங்கல், செயற்கையான நுண்ணறிவினைப் பயன்படுத்துதல், தரவு முகாமைத்துவம் மற்றும் தயாரிப்பு மற்றும் வர்த்தகத்தினை அடிப்படையாகக் கொண்ட இ-வர்த்தகம் போன்ற இ-வர்த்தக பிரயோகங்களினைப் பிரயோகிப்பதற்கு அரசாங்க மற்றும் தனியார் துறையின் தேவைப்பாடுகளினை அடையாளங் காணும் நடவடிக்கையானது, நாட்டின் இ-வர்த்தகத் தயார்நிலையினை மதிப்பாய்வு செய்வதற்கான மிக முக்கியமான பணியாகும். ஆரம்பகட்ட கலந்துரையாடலின் போது, உலக வங்கியானது கொடை வழங்கும் நாடுகள்னை அடையாளங் காணுதல் மற்றும் இலங்கையில் இ-வர்த்தகத்தினை விருத்திக்காக முதலீட்டாளர்களினைக் கவருதல் ஆகிய நோக்கங்களுடன் இலங்கை தொடர்பான முன்னுரிமை அடிப்படையிலான இந்த மதிப்பீட்டினை மேற்கொள்ளும் பொருட்டு UNCTAD உடன் கூட்டிணைந்து செயற்படுவதற்கு தமது விருப்பத்தினைத் தெரிவித்துள்ளது.

### 3.7.4 அங்ராட் இ- வர்த்தக வாரத்தில் பங்குபற்றுதல்

2017 ஏப்பிரல் 24 – 28 வரையில் நடாத்தப்பட்ட அங்ராட் இ- வர்த்தக வாரத்தில், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் ஜெனிவாவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இச்சந்தர்ப்பத்தில், eBay Inc.இன் சர்வதேச பொதுக் கொள்கைப் பணிப்பாளர், செல்வி ஹான் மெலின் அவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கப் பெற்றது. eBay உடன் கூட்டுச்சேர்ந்து பணியாற்றுவது குறித்த இலங்கையின் ஆர்வம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக, அவர்களின் ஏற்றுமதித் தளத்தில் சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்களினைக் கொண்டு வருவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. குறித்த கூட்டத்தில், இலங்கை ஏற்றுமதி

அபிவிருத்திச் சபையானது இ- வர்த்தகத்தினூடாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான குறுக்கெல்லை வர்த்தகத்தினை விருத்தி செய்வதற்கு eBay இனைக் கவனத்தில் கொள்வதற்கான முன்மொழிவொன்றினைச் சமர்ப்பித்துள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் eBay Inc. இடையிலான சாத்தியமான கூட்டுச்சேர்வு மற்றும் அதனை இக்கருத்திட்டத்தில் எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. 2017 ஒக்டோபரில், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உதவிப் பணிப்பாளர் இ- வர்த்தகம் மற்றும் டியிரல் பொருளாதாரம் மீது அரசாங்கங்களுக்கிடையிலான நிபுணர்கள் குழுவின் முதலாவது அமர்வில் கலந்து கொண்டார்.

### 3.8 வர்த்தக வசதிப்படுத்தல் தொடர்பான உடன்படிக்கை:

1995 இல் உலக வர்த்தக நிறுவனம் தாபிக்கப்பட்டதன் பின்னரான குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் (TFA) அமுலாக்கத்தினைக் குறிப்பிடலாம். வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையானது 2013 டிசம்பரில் இந்தோனேசியா பாலித் தீவில் நடாத்தப்பட்ட உலக வர்த்தக நிறுவனத்தின் ஒன்பதாவது அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் அடையப்பெற்ற மிக முக்கியமான விடயமாகும். இது அவர்களின் உள்நாட்டு உறுதிப்படுத்தல் செயல்முறையினைப் பூர்த்தி செய்துள்ள உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு (108) பேர்களின் சம்மதத்துடன் 2017 பெப்ரவரி 22 ஆம் திகதியன்று சட்டரீதியாக வலுவுக்கு வந்தது.
வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் நோக்கம், சுங்க நடைமுறைகளில் ஒத்திசைவினையும் நவீனமயப்படுத்தலினையும் ஏற்படுத்துவதேயாகும். இதன் மூலம், கொடுக்கல் வாங்கல் செலவினைக் குறைக்க முடிவதுடன் போட்டித்தன்மையில் மேம்பாட்டினையும் ஏற்படுத்த முடியும். இது பொருட்களின் இடைத்தங்கல் உள்ளடங்கலான நகர்வு, விடுவிப்பு மற்றும் அகற்றுகை என்பவற்றினைத் துரிதப்படுத்துதற்கான ஏற்பாடுகளினையும் கொண்டுள்ளது. இது வர்த்தக வசதிப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அதிகாரிகளுக்கிடையில் வினைத்திறன்வாய்ந்த ஒத்துழைப்பினையும் ஏற்படுத்துகின்றது.
வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையானது முழுமையாக அமுல்படுத்தப்படுமாயின், வர்த்தகச் செலவுகளை சராசரியாக 14.3% இனால் குறைக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இது இறக்குமதி செய்யத் தேவைப்படும் காலத்தினை 47% இனால் குறைக்குமெனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இது 91% வரையில் மேலும் ஏற்றுமதி காலப்பகுதியினை குறைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2030 ஆம் ஆண்டளவில், வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையின் அமுலாக்கமானது சர்வதேச ஏற்றுமதி வளர்ச்சியில் 2.7% வரையில் அதகரிப்பினை ஏற்படுத்துமெனவும் அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் குறைவிருத்தி நாடுகளுக்கு பாரியளவில் இலாபங்களினை ஈட்டிக் கொடுக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.
மேலும், இத்தகைய நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களின் பல்வகைப்படுத்தல் தொடர்பில் சாதகமான சூழ்நிலைகள் தோன்றியுள்ளன.

வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையானது அ, ஆ மற்றும் இ எனும் மூன்று வகையீடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள வர்த்தக வசதிப்படுத்தல் இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு அனைத்து உலக வர்த்தக நிறுவன உறுப்பு நாடுகளையும் கோருகின்றது. வகையீடு ‘அ’ ஆனது இந்த உடன்படிக்கையினை பயனுடையதாக்குவதற்கான அமுலாக்கல் ஏற்பாடுகளினைக் கொண்டுள்ளதுடன் வகையீடு “ஆ” ஆனது இந்த உடன்படிக்கை பயனுறுதியானதைத் தொடர்ந்து நிலைமாற்ற காலப்பகுதியின் பின்னரான அமுலாக்கல் திகதிக்கான ஏற்பாடுகளினைக் கொண்டுள்ளது. வகையீடு “இ” ஆனது இந்த உடன்படிக்கை பயனுறுதியானதைத் தொடர்ந்து நிலைமாற்ற காலப்பகுதியின் பின்னரான அமுலாக்கல் திகதிக்கான ஏற்பாடுகளினைக் கொண்டுள்ளதுடன் திறன விருத்திக்கான உதவுகை மற்றும் ஆதரவுக்கான ஏற்பாடுகளினூடாக திறனமுலாக்கத்தினை ஈட்டுமாறு கோருகின்றது. முன்னேற்றமடைந்த நாடுகள் மற்றும் கொடை முகவராண்மைகள் வகையீடு “இ” இன் இணக்கப்பாடுகளினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான திறன் விருத்தியினைப் பெறுவதற்கு அபிவிருத்தியடைந்துவரும் மற்றும் குறைவிருத்தி நாடுகளிற்கு உதவியளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வருட இறுதியில், 106 நாடுகள் வகையீடு அ அறிவித்தலினைச் சமர்ப்பித்துள்ள அதேவேளையில், அவற்றுள் 43 மற்றும் 34 நாடுகள் முறையே ஆ மற்றும் இ அறிவித்தல்களினைச் சமர்ப்பித்துள்ளன. உடன்படிக்க்கையின் தேவைப்பாடுகளின்படி, 39 ஆவது நாடாக அறிவிக்கப்பட்டுள்ளஇலங்கையானது 2014 ஜூலை 31 ஆம் திகதியன்று உலக வர்த்தக நிறுவனத்திற்கான வகையீடு "அ" இணக்கப்பாடுகளினை அறிவித்துள்ளது. இலங்கையானது வகையீடு "அ" இணக்கப்பாடுகளின் கீழ் 11 ஏற்பாடுகளினை அறிவித்துள்ளது.

2017 பெப்ரவரியில், "ஆ" மற்றும் "இ" வகையீடு ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட திகதிகள் NTFC இனால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், சிக்கலான உள்ளக நடைமுறைகளினால், வகையீடு "ஆ மற்றும் "இ" இணக்கப்பாடுகளின் அறிவித்தலானது, அவற்றின் அமுலாக்கல் தொடர்பான உறுதியான திகதிகளினைக் குறிப்பிடுவதுடன் அவை 2018 பெப்ரவரி 08 ஆம் திகதி உலக வர்த்தக நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டன. இலங்கையானது வகையீடு "ஆ" இணக்கப்பாடுகளின் கீழ் 2 ஏற்பாடுகளினையும் வகையீடு "இ" இணக்கப்பாடுகளின் கீழ் 23 இணக்கப்பாடுகளினையும் அறிவித்துள்ளது

உலக வங்கியானது வர்த்தக வசதிப்படுத்தல் அமுலாக்கலின் மிக முக்கியமான இரண்டு விடயங்களான வர்த்தக தகவல் தளம் (TIP) மற்றும் தேசிய தனிப் பலகணியின் விளக்க வரைபு ஆகியவற்றின் விருத்திக்கு உதவியளித்துள்ளது. வர்த்தக தகவல் தளமானது உலக வங்கி குழுமத்தின் (WBG) தொழில்நுட்ப மற்றும் நிதிசார் உதவுகையுடன் விருத்தி செய்யப்படுகின்றது. உலக வங்கி குழுமத்தினால் நியமிக்கப்பட்ட உள்ளக உசாவுதல் நிறுவனம் 2017 நவம்பர் இறுதியில் இரண்டு கருத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இரண்டு கருத்திட்டங்களும் 2018 ஜூலை மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வர்த்தக தகவல் தளமானது வர்த்தக திணைக்களத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும்.

வர்த்தக திணைக்களமானது வர்த்தக தகவல் தளத்திற்கு அனுசரணை வழங்கும். சர்வதேச உசாவுதல் நிறுவனமானது தளத்தினை விருத்தி செய்யும் பொருட்டு உலக வங்கி குழுமத்தினால் நியமிக்கப்பட்டுள்ளது. PM குழுவானது தற்போது வர்த்தக தகவல் தளத்தினை விருத்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது. வர்த்தக திணைக்களமானது வர்த்தக தகவல் தளத்திற்கான பூர்வாங்க தகவல்களினை 55 வர்த்தகத்துடன் தொடர்புடைய முகவராண்மைகளிலிருந்து சேகரித்துள்ளது. சர்வதேச உசாவுதல் நிறுவனமும், வர்த்தக தகவல் தளத்தில் பதிவேற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற முகவராண்மைகளின் தகவல்களினையும் பார்வையிட்டுள்ளது. தற்போது அவை அத்தகைய தகவல்களில் 20-25% இனை பதிவேற்றக்கூடிய நிலையிலுள்ளன. இரண்டு கருத்திட்டங்கள் 2018 ஜூலையில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தின் அபிப்பிராயப்படி, இக்கருத்திட்டங்களின் உரித்துடமையானது எடுக்கப்பட வேண்டியுள்ளது.

வர்த்தக திணைக்களமானது காலத்திற்குக் காலம் வர்த்தக தகவல் தளக் கருத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் இணையத்தளத்தின் உண்மைத் தன்மை குறித்து மீளாய்வு செய்வ்வதுடன், இலங்கை அரசாங்கத்திடம் இக்கருத்திட்டத்தினை ஒப்படைத்த பின்னர் அதன் நிலையான தன்மையினைப் பேணுவதற்கும் இணையத் தளத்தினை முன்னெடுத்துச் செல்லும் வகையில் உள்ளக பதவியினருக்கு பயிற்சியளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளினை எடுத்து வருகின்றது. வர்த்தக தகவல் தளமானது ICTA கணிப்பொறியிலிருந்து இதனை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

இலங்கை தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவானது (NTFC) 2014 ஜூன் 03 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவையானது அதனை முறையாகத் தாபிப்பதற்கு 2016 ஜனவரியிலேயே அங்கீகாரம் வழங்கியிருந்தனர். இலங்கை தேசிய வர்த்தக வசதிப்படுத்தல் குழுவுக்கான செயலகமானது 2017 மே 02 ஆம் திகதி அதன் தொழிற்பாடுகளினை ஆரம்பித்த உலக வங்கி குழுமத்தின் (WBG) ஆதரவுடனும் தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய வர்த்தக வசதிப்படுத்தல்

குழுவின்(NTFC) நோக்கெல்லையானது, வர்த்தக வசதிப்படுத்தல் இணக்கப்பாடுகளின் அமுலாக்கல் மற்றும் ஏனைய வர்த்தக வசதிப்படுத்தல் ஆரம்பிக்குகைகள் மற்றும் NTFC இன் உசாத்துணை நியதிகள் என்பவற்றினை நடைமுறைப்படுத்தும் வகையில் அதிகாரமிக்கதாக விரிவாக்கப்பட்டுள்ளதுடன் NTFC செயலகமானது 2017.12.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தினையும் பின்பற்றியுள்ளது. மீளாய்வு காலப்பகுதியில், NTFC இன் இணைத் தலைவராக வர்த்தகப் பணிப்பாளர் நாயகம் தொழிற்பட்டுள்ளார்.

NTFC ஆனது வர்த்தக வசதிப்படுத்தலின் அமுலாக்கலுக்கான முன்னுரிமையளிக்கப்பட்ட செயல்திட்டமானது விருத்தி செய்யப்பட்டது. இது விசேட அமுலாக்கல் திட்ட ஏற்பாடு மற்றும் முழுமையான வர்த்தக வசதிப்படுத்தல் அமுலாக்கலுக்கான ஒரு முதன்மைத் திட்டமொன்றினையும் கொண்டுள்ளது. வர்த்தக வசதிப்படுத்தல் அமுலாக்கல் திட்டம் மீதான செயலமர்வு: முன்னுரிமை முறையில் அனுப்பி வைக்கப்படும் வழிமுறையானது ITC இன் தொழில்நுட்ப மற்றும் நிதிசார் உதவுகையுடன் 2017 ஒக்டோபர் 11 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது.

2016 இல், தேசிய வர்த்தக தகவல் தளம் மற்றும் தேசிய தனிப் பலகணியின் செயல் வரைபு என்பன NTFC இன் வர்த்தக வசதிப்படுத்தல் அமுலாக்கல் திட்டதிலுள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த முன்னுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ளன. இந்த இரண்டு கருத்திட்டங்களும் NTFC இன் நேரடி தலைமைத்துவத்தின் கீழ் அமுல்படுத்தப்படும். NSW மற்றும் TIP இற்கான TOR கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. TIP மற்றும் NSW இன் TOR களின்படி, NTFC செயலகமானது கருத்திட்டத்திற்கான உரிய பொறுப்பு வாய்ந்த நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட TIP மற்றும் NSW தொழிற்படு குழுக் கூட்டங்களினை நிருவகிப்பதிலும் ஒருங்கிணைப்பதிலும் உதவியளிக்கின்றது.

இதுவரையில் TIP மற்றும் NSW தொடர்பில் பல்வேறு செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளில் NSW இன் மிகச் சிறந்த செய்றபாடுகள் தொடர்பில் அக்கறைதாரர்களுக்கு அறிவூட்டும் பொருட்டு 2017 ஆகஸ்ட் 8-9 ஆம் திகதிகளில் ஆசிய மற்றும் இலங்கை மிகச்சிறந்த செயற்பாடுகளின் தனியொரு பலகணி தொடர்பான செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. TIP மற்றும் NSW தொடர்பான இரண்டாவது செயலமர்வு, இரண்டு கருத்திட்டங்களை விருத்தி செய்வதற்கு அவர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய இரண்டு கருத்திட்டங்கள் குறித்து அக்கறைதாரர்களுக்கு அறிவூட்டும் பொருட்டு கருத்திட்ட உசாவுலர்களினால் 2017 டிசம்பர் 05 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. மூன்றாவது செயலமர்வானது NSW மாதிரிகளினை நிறைவு செய்யும் பொருட்டு 2018 ஜனவரி 29 ஆம் திகதியன்று உத்தேச இலங்கை தேசிய தனியொரு பலகணி தொடர்பில் நடாத்தப்பட்டது.

## 3.9 இலங்கையில் குவிப்பெதிர்ப்பு எதிரீட்டு நடவடிக்கைகள் தொடர்பான சட்டவாக்கத்தினை சட்டமாக்குதல்

அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட குவிப்பெதிர்ப்பு, எதிரீட்டு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான தேசிய சட்டமூல வரைபானது 2016.10.26 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்டது. சட்டமூலங்கள், 2016.12.16 ஆம் திகதிய சட்ட வடிவமைப்புக்களில் மாற்றம் செய்தல் உள்ளடங்கலாக தேவையான நடவடிக்கைகளினை எடுப்பதற்காக சட்ட வரைஞர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேவையான இசைவாணை மற்றும் சான்றிதழ்களினைப் பெற்றுக் கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு மாற்றப்பட்ட குவிப்பெதிர்ப்பு, எதிரீட்டு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் மீதான இறுதிச் சட்டமூல வரைபானது 2017.02.09 ஆம் திகதியன்று சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டது. விரிவான

கலந்துரையாடல்களின் பின்னர், சட்டமா அதிபர் அலுவலகமானது, ஏனைய இரண்டு மொழிகளில் முறையே 2017 ஆகஸ்ட் மற்றும் செப்ரெம்பரில் இரண்டு சட்டமூல வரைபுக்களுக்குத் தேவையான சான்றிதழ்களை வழங்கியுள்ளது. கௌரவ.கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 2017.11.15 ஆம் திகதியன்று பாராளுமன்ற அவைத் தலைவரின் அலுவலகத்திற்கு இத்தகைய இரண்டு சட்டமூலங்களும் அனுப்பி வைக்கப்பட்டன. அதன் விளைவாக, இத்தகைய இரண்டு சட்டமூலங்களும் 2017.12.08 ஆம் திகதியன்று வர்த்தக மற்றும் வாணிபம் தொடர்பான துறைசார் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் துறைசார் குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் 2017 டிசம்பர் 08 ஆம் திகதியன்று சட்டவரைஞர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அதன்பின்னர், திருத்தியமைக்கப்பட்ட இரண்டு சட்டமூலங்களும் 2018 பெப்ரவரி 23 ஆம் திகதியன்று இரண்டாவது வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதுடன் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பாக, சாத்தியமான வகையில் சட்டவாக்கங்களுடன் அடுத்த நிலைகளுக்குச் செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
வர்த்தக திணைக்கள அதிகாரிகள் இத்தகைய சட்டமூலங்களை சட்டமாக்குவதன் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடுவதற்கு சில பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டங்களை நடாத்தியுள்ளதுடன் நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகள் மற்றும் எதிர்பாராத இறக்குமதி மிகைகளுக்கெதிராக உள்நாட்டுக் கைத்தொழில் மற்றும் தேசிய பொருளாதாரம் என்பவற்றினைப் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கையில் இருக்க வேண்டிய இத்தகைய சட்டமூலங்களின் உடனடித் தேவை குறித்து அவர்களுக்கு அறவூட்டுவதற்கு தனியார் துறை அக்கறைதாரர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏற்பாடு செய்துள்ளது.

### 3.10 பல்தரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் மீதான திறன் விருத்திக்கான தொழில்நுட்ப உதவுகை

வர்த்தகத் திணைக்களமானது ஜெனிவாவிலுள்ள உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச வர்த்தக நிலையம் மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து உலக வர்த்தக நிறுவனத்தின் பல்தரப்பு வர்த்தக முறைமையின் கீழ் பல்வேறுபட்ட உடன்படிக்கைகள் தொடர்பில் அக்கறைதாரர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் அறிவூட்டும் நோக்குடன் இலங்கையில் பின்வரும் தொழில்நுட்ப உதவுகை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயலமர்வுகளை நடாத்தியுள்ளது.

- ✓ **உலக வர்த்தக நிறுவன சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நியமங்கள் (SPS) /வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள் (TBT) உடன்படிக்கை, கொழும்பில் 2017 பெப்ரவரி 20 – 22 வரையில்.**

அக்கறைதாரர்களுக்கிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்குடன், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நியமங்கள் (SPS) நடவடிக்கைகள் மற்றும் வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள் தொடர்பான உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கைகள் மீதான தேசிய செயலமர்வொன்று 2017 பெப்ரவரி 20 இலிருந்து 22 ஆம் திகதி வரையில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. உலக வர்த்தக நிறுவனத்தின் வர்த்தக மற்றும் சுற்றாடல் பிரிவு மற்றும் நியமங்கள் வர்த்தக மற்றும் அபிவிருத்தி வசதிகள் பிரிவிலிருந்து இரண்டு அதிகாரிகள் வளவாளர்களாக கலந்து கொண்டார்கள். இரண்டு உடன்படிக்கைகள் தொடர்பில் அரசாங்க மற்றும் தனியார் துறையிலிருந்தான அக்கறைதாரர்களுக்கு புரிதலினை ஏற்படுத்தும் வகையில் இரண்டரை நாட்கள் கொண்டதான செயலமர்வொன்று, குறிப்பாக இந்த உடன்படிக்கையின் கீழான வெளிப்படைத்தன்மை தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தும் வகையில் நடாத்தப்பட்டது.

இந்த செயலமர்வுக்கு பின்னூட்டி நிகழ்வாக ஆசிய நாடுகளுக்கான பொதுவான கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும் நியமங்கள் தொடர்பில் பிராந்திய செயலமர்வொன்றினை ஏற்பாடு செய்த சர்வதேச

நியமங்கள் நிறுவனத்தின் (ISO) பங்குபற்றுதலின் மூலம் இந்தச் செயலமர்வுக்கும் ஆதரவளிக்கப்பட்டது.

- ✓ **கொழும்பில் 2017 ஜூலை 12 – 14 வரையில் நடாத்தப்பட்ட உலக வர்த்தக நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கை தொடர்பான தேசிய செயலமர்வு (ITA).**

இந்த செயலமர்வானது இலங்கையின் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் தொடர்பில் விரிவான பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டினை நடாத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டது. ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதரகமானது இந்த செயலமர்வில் வளவாளர்களாக கலந்து கொள்வதற்காக உலக வர்த்தக நிறுவனத்திலிருந்து இரண்டு நிபுணர்களை இலங்கைக்கு வரவழைப்பதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டதுடன் இச்செயலமர்வில் அவர்கள் தமது நிபுணத்துவத்துவம் தொடர்பான அனுபவத்தினை கொள்கை வகுப்பாளர்கள், கைத்தொழிலாளர்கள் மற்றும் இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையின் அக்கறைதாரர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். SLAASCOM, FITIS, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தும் ஆணைக்குழு, மொபிரல், Verite Research,கொள்கை ஆய்வுகள் நிறுவகம், இலங்கை ஏற்றுமதிச் சபை, FCCISL, ICTA மற்றும் பல்வேறு தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவகங்கள் போன்ற இலங்கை கணனித் துறையினைச் சேர்ந்த சமூகப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இரண்டு நாள் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

- ✓ **கொழும்பில் 2017 செப்ரெம்பர் 12 – 13 வரையில் நடாத்தப்பட்ட அரசாங்க பெறுகைகள் உடன்படிக்கை (GPA) தொடர்பான தேசிய மட்ட செயலமர்வு**

வர்த்தக திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையினைத் தொடர்ந்து, ஜெனிவாவலுள்ள தூதரகம் அரசாங்க பெறுகைகள் தொடர்பில் தேசிய மட்டத்திலான செயலமர்வினை நடாத்துவதற்கு கொழும்புக்கு உலக வர்த்தக நிறுவன நிபுணர் குழுவொன்று வருகை தருவதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டது. 2003 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையானது அரசாங்க பெறுகைகள் தொடர்பான உலக வர்த்தக உடன்படிக்கையில் பார்வையாளராக இருந்து வருவதுடன் அரசாங்க பெறுகைகள் உடன்படிக்கையின் அமுலாக்கத்தின் அபிலாசைகள் மற்றும் அபிவிருத்திகள் குறித்து அக்கறையுடன் செயற்பட்டுள்ளது.

- ✓ **கொழும்பில் 2017 ஒக்டோபர் 10 – 12 இல் நடாத்தப்பட்ட பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மீதான தேசிய மட்ட கருத்தரங்கு**

பொருட்கள் மற்றும் சேவைகளின் வர்த்தகம், புலமைச் சொத்துக்கள், முதலீடு, வர்த்தக நிவாரணங்கள், SPS மற்றும் TBT என்பவற்றினை உள்ளடக்கியதாக, இலங்கையில் இடம்பெற்றுவரும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மீதான தற்போதைய பேச்சுவார்த்தைகளின் விரிவான தன்மையானது, பேச்சுவார்த்தையாளர்களுக்கு மட்டுமல்லாமல் அத்தகைய பிராந்திய வர்த்தக உடன்படிக்கையிலிருந்து நன்மைகளினை எதிர்பார்க்கின்ற ஏனைய அக்கறைதாரர்களுக்கும் பாரிய சவால்களினைக் கொண்டு வந்தது. அதற்கிணங்க, எதிர்காலத்தில் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்திருக்கும் அரசாங்க மற்றும் தனியார் துறைப் பிரதிநிதிகளுக்கு வசதியளிக்கும் நோக்குடன், இக்கருதரங்கானது, உலக வர்த்தக நிறுவனத்தின் பிராந்திய வர்த்தக உடன்படிக்கை நிபுணர்களின் பங்களிப்புடன் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

- ✓ வர்த்தக திணைக்களத்துடன் இணந்த வகையில் ஐரோப்பிய ஒன்றியம் – இலங்கை வர்த்தகத்துடன் தொடர்புடைய கருத்திட்ட உதவுகையின் கீழ் ITC இனால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான தொழில்நுட்ப உதவுகை நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு;

- வர்த்தக வசதிப்படுத்தல் தொடர்பான தேசிய செயலமர்வு, 2017 ஏப்பிரல் 19-20 ஆம் திகதிகளில் கொழம்பில் நடாத்தப்பட்டது;
- வர்த்தக வசதிப்படுத்தல் தொடர்பான தேசிய செயலமர்வு, 2017 ஏப்பிரல் 24-25 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.;
- சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளினை (FTAs) ஆகக்கூடியளவில் பயன்படுத்துவது தொடர்பான தேசிய செயலமர்வு, கொழும்பில் மே 24-25 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.;
- தகவல் தொழில்நுட்ப உடன்படிக்கை மீதான தேசிய செயலமர்வு கொழும்பில் ஜுலை 12 – 13 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது;
- வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் மீதான தேசியச் செயலமர்வு, 2017 ஜுலை 24-27ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது;
- சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மீதான தேசிய செயலமர்வு, கொழும்பில் 2017 ஆகஸ்ட் 1-3 வரையில் நடாத்தப்பட்டது.;
- பொருளாதாரம் மீதான தொழில்நுட்ப திறன் மற்றும் வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான தேசிய செயலமர்வானது (முதலாவது பயிற்சித்தொகுதி),கொழும்பில் 2017 ஆகஸ்ட் 23 – 24 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.;
- "பொருளியல் மற்றும் வர்த்தகம் தொடர்பான தெளிவுபடுத்தல்கள்" அறிமுகம் தொடர்பான தேசிய செயலமர்வு (பயிற்சித் தொகுதிI) கொழும்பில் 2017 ஆகஸ்ட் 23-24 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது;
- அரசாங்க பெறுகைகள் உடன்படிக்கை மீதான தேசிய செயலமர்வானது, கொழும்பில் 2017 செப்ரெம்பர் 12–13 வரையில் நடாத்தப்பட்டது.
- ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய நாடுகளுக்கான வர்த்தக மற்றும் சுற்றாடல் மீதான பிராந்திய செயலமர்வு, கொழும்பில் 2017 செப்ரெம்பர் 18 – 19 வரையில் நடாத்தப்பட்டது;
- இலங்கை அதிகாரிகளுக்கான திறன் விருத்தி தொடர்பான தேசிய செயலமர்வு, கொழும்பில் 2017 செப்ரெம்பர் 20 – 22 வரையில் நடாத்தப்பட்டது;
- உலக வர்த்தக நிறுவன / பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மீதான தேசிய செயலமர்வு, கொழும்பில் 2017 ஒக்டோபர் 10 – 12 வரையில் நடாத்தப்பட்டது;
- முன்னுரிமையளிக்கப்பட்டதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான வர்த்தக வசதிப்படுத்தல் மறுசீரமைப்புக்களின் அமுலாக்கம் தொடர்பான தேசிய செயலமர்வு, கொழும்பில் 2017 ஒக்டாபர் 11 – 12 வரையில் நடைபெற்றது;
- வர்த்தக தீர்வுகள் தொடர்பான தேசிய செயலமர்வு, கொழும்பில் 2017 ஒக்டோபர் 25 – 27 இல் நடாத்தப்பட்டது;
- "ஐரோப்பிய வெளியகச் செயற்பாடு மற்றும் ஜீஎஸ்பி பிளஸின் இணக்கப்பாடும் பயன்பாடும்" எனும் தலைப்பில் பெல்ஜியம் புருஸல்ஸில் 2017 நவம்பர் 6 – 9 வரையில் நடாத்தப்பட்டது;
- பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் மிகச் சிறந்த செயற்பாடுகள் மீதான செயலமர்வு;
    - நவம்பர் 6, 2017 - யாழ்ப்பாணம்
    - நவம்பர் 2017 – கண்டி
    - நவம்பர் 10, 2017 – காலி

# 4. இருதரப்பு வர்த்தகமும் பொருளாதார ஒத்துழைப்பும்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கையானது அதன் பிரதான வர்த்தக பங்காளி நாடுகளுடனும் அவ்வாறே ஏனைய நாடுகளுடனும் இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றினை மேம்படுத்துவது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், கட்டார் மற்றும் ஈரான் என்பவற்றுடனான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்துள்ளன. மீளாய்வு காலப்பகுதியில், இலங்கையானது, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் கைச்சாத்திட்டுள்ள இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (FTA) மற்றும் சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூருடனான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் என்பவற்றின் கீழ் அதன் வர்த்தக நலன்கள் குறித்து சமமான முக்கியத்துவத்தினை வழங்கியுள்ளது.

## 4.1. இந்தியாவுக்கான சந்தை அணுகுமுறையினை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள்

### 4.1.1 இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)

இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ், இலங்கையின் ஏற்றுமதிகளில் தற்போது ஏறக்குறைய 65 – 70% ஆனவை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் பயனைப் பெறுகின்ற பிரதான உற்பத்திப் பொருட்களில் விலங்குணவுகள், பாக்கு, வாசனைத்திரவியங்கள், மீள்சுழற்சிக்குட்படுத்தப்பட்ட கடதாசிகள், கராம்பு, மிளகு, தளபாடங்கள், காப்பளிக்கப்பட்ட செப்புக் கம்பிகள், சலவைக் கற்கள், நீர், தைத்த ஆடைகளும் துணிகளும், சைக்கிள், இறப்பர் கையுறைகள், அட்டைப் பெட்டிகள், காற்றழுத்தத் ரயர்கள், MDF பலகைகள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய் வகைகள் என்பன உள்ளடங்குகின்றன.

அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் நடைபெற்று வரும் உத்தேச பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளின் (ETCA) முக்கிய பகுதியாக விளங்கி வருவதால், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் வர்த்தக திணைக்களமானது, உள்நாட்டு அக்கறைதாரர்களுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளினை நடாத்தி வருவதைப் போன்று இலங்கை – இந்திய பொருட்களின் வர்த்தகத்தில் மறைமுகமாகக் காணப்படுகின்ற ISFTA தொடர்பான பிரச்சனைகளினைத் தீர்ப்பதில் இந்திய தரப்பினர் முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. 2017 இல் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது, இலங்கை தரப்பினால், ISFTA இன் கீழ் இலங்கைக் கம்பனிகளினால் ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஸ்ரோபரி, விலங்குணவு போன்ற குறித்த சில உற்பத்திப் பொருள் வகையீடுகளுக்கான சுங்க விடுவிப்பு தொடர்பான பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடிந்துள்ளது.

### 4.1.2 இந்திய – இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை (ETCA)

அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கொள்கையின்படி, இலங்கையும் இந்தியாவும் உத்தேச பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை (ETCA) தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளினை ஏற்கனவே நடாத்தியுள்ளன. 2017, டிசம்பர் 18 இலிருந்து 20 வரை நடாத்தப்பட்ட 7 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது, இரண்டு தரப்புக்களும் ETCA வரைபு மீதான தமது பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு

செய்து கொண்டுள்ளதுடன் ISFTA இன் கீழ் வரியல்லா நடவடிக்கைகள் (NTMs) தொடர்பான பிரச்சனைகளில் நிறுவையாயுள்ள சில பிரச்சனைகள் குறித்தும் மீளாய்வு செய்து கொண்டதுடன் விரைவாக அவற்றிற்கு தீர்வ காண்பதற்கு எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் குறித்தும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த விடயத்தில், இலங்கை தரப்பானது தைத்த ஆடைகள், கறுப்பு மிளகு, வனஸ்பதி (ஹைட்ரோஜன் சேர்க்கப்பட்ட மரக்கறி எண்ணெய்) மற்றும் உலர்த்திய தேங்காய் போன்ற இலங்கை ஏற்றுமதிகளில் சிலவற்றின் மீது இந்திய அரசாங்கம் விதித்துள்ள தொகை ரீதியான கட்டுப்பாடுகளினை விரைவாக நீக்குவது குறித்து கூடிய கவனம் செலுதியுள்ளது.

இலங்கை தரப்பானது பொருட்கள் தொடர்பான பரஸ்பர அங்கீகார உடன்படிக்கைகளினை (MRA) நிறைவு செய்வதற்கான அவசிய தேவை குறித்தும் குறிப்பிட்டுள்ளது. இலங்கை தரப்பானது இந்திய தரப்புடன் MRA வரைபு குறித்து ஏற்கனவே கலந்துரையாடியுள்ளதுடன், இந்திய தரப்பு, வரைபானது அது தொடர்பான அதிகாரிகளினால் ஆய்வு செய்யப்பட்டதாக அறிவித்துள்ளது. அவர்கள் தமது ஏற்றுமதியாளர்களினால் எதிர்நோக்கப்படும் ISFTA தொடர்பான ஏதேனும் பிரச்சனைகளுக்கு விரைவாக தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளினை ஏற்படுத்திக் கொள்வதற்காக இரண்டு நாடுகளினதும் உரிய அதிகாரிகளுக்கிடையில் கட்டமைக்கப்பட்ட நிறுவன ரீதியான பொறிமுறையொன்றினைத் தாபிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடியுள்ளன.

## 4.2 பாகிஸ்தானுக்கான சந்தை அணுகுமுறையினை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள்

### 4.2.1. பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தகஉடன்படிக்கை (PSFTA)

2005 இல் கைச்சாத்திடப்பட்டு செயற்பாட்டுக்கு வந்த பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு வர்த்தகப் பறுமதியானது கணிசமானளவு மேம்பாட்டினை அடைந்துள்ளது. மீளாய்வு காலப்பகுதியில் கீழான காலப்பகுதியில், PSFTA இன் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்ட பிரதான பொருட்களினுள் தேங்காய், வெற்றிலை, கொப்பரா, MDF பலைகைகள், பிஸ்கற்கள் மற்றும் கருந்தேயிலை என்பன உள்ளடங்கும் அதேவேளையில், அத்தகைய குறித்த காலப்பகுதியில் PSFTA இன் கீழான இறக்குமதிகளில் இரும்பின் ஒட்டப்பட்ட அல்லது குறுக்குப் பகுதி அல்லது கலப்பல்லா இரும்பு, அரிசி, புதிய தோடம்பழங்கள், போட்லன்ட் சீமெந்து, மாவு வகைகள், உணவுகள், மீன் அல்லது நத்தை போன்ற உயிரினங்கள், சிப்பிகள் அல்லது ஏனைய நீர் வாழ் உயிரினங்கள் என்பனவும் உள்ளடங்குகின்றன.

## 4.3 இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான சட்டரீதியான உடன்படிக்கை (TIFA)

2016 ஏப்பிரலில் ஐக்கிய அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடாத்தப்பட்ட இலங்கை – ஐக்கிய அமெரிக்க வர்த்தக மற்றும் முதலீட்டுப் (TIFA) பேரவையின் 12 அமர்வின் போது, இரண்டு நாடுகளும் இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கான கூட்டு செயல்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியுள்ளன.

2017 இல், மேற்படி உடன்படிக்கை மற்றும் கூட்டு செயல்திட்டத்தின் அமுலாக்கம் என்பவை தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட முன்னைய பணி தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியானது நிறைவு பெற்றுள்ளது.

### 4.4. புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளினை மேற்கொள்ளுதல்

### 2014.4.1 சீனா மற்றும் இலங்கையுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

2014 செப்ரெம்பர் 16 ஆம் திகதி நாடுகளின் தலைவர்கள் மட்டத்தில் சீனா மற்றும் இலங்கைக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினைத் தொடர்ந்து, இரண்டு தரப்புக்களும் உத்தேச சீனா மற்றும் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (CSFTA) தொடர்பில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் எற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களின் வர்த்தகம் தொடர்பான அவர்களின் பேச்சுவார்த்தைகளின் போது, இரண்டு தரப்புக்களும் வர்த்தக சுதந்திரமளித்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்குப் (TLP) பொருத்தமான வரையறைகள் தொடர்பில் இலங்கையினால் எதிர்பார்க்கப்படும் வர்த்தக சுதந்திரமளித்தல் தொடர்பான அமுலாக்கல்களினைக் கருத்தில் கொண்டு அதன் உள்நாட்டுக் கைத்தொழில்கள் தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தைகளினை நடாத்தியுள்ளன. வர்த்தக திணைக்களமானது எதிர்மறைப் பட்டியல்களினை தொகுக்கும் நோக்கத்திற்கான விரிவான கைத்தொழில்சார் மதிப்பாய்வின் பின்னரான 37% நெகிழ்வுப் பட்டியலினைத் தயாரிப்பது உள்ளடங்கலான இத்தகைய பேச்சுவார்த்தைகளுக்கான நிபுணத்துவம் வாய்ந்த தொழில்நுட்ப உதவுகையினைத் தொடர்ந்தும் வழங்கி வருகின்றது.

### 4.4.2. சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கிடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

2017 இன் இறுதியில், இலங்கையும் சிங்கப்பூரும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளின் எட்டு சுற்றுக்களினை நிறைவு செய்துள்ளதுடன் மேற்குறித்த உடன்படிக்கையின் நகல் வரைபினை பூர்த்தி செய்துள்ளன. விரிவான உடன்படிக்கையாக இருப்பதால், இது வர்த்தக வசதிப்படுத்தல், புலமைச் சொத்துக்கள், வெளிப்படைத்தன்மை, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, SPS மற்றும் TBT, பண்ட வர்த்தகம், சேவை வர்த்தகம், முதலீடு மற்றும் அரசாங்க பெறுகைகள் மற்றும் வர்த்தக நிவாரணங்கள் என்பன உள்ளடங்கலான பரந்தளவிலான நலன்களைக் கொண்டுள்ளது. வர்த்தக திணைக்களமானது அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற வர்த்தக நிவாரணங்கள் மற்றும் உலக வர்த்தக நிறுவனத்துடன் தொடர்புடைய சட்டவிதிகள் மற்றும் உடன்படிக்கைகள் போன்ற விடயங்களின் தொடர்பான பேச்சுவார்த்தைக் குழுவிற்கு தொழில்நுட்ப நிபுணர்களின் உதவுகையினை வழங்கியுள்ளது.

### 4.5 கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்களுக்களின் பேச்சுவார்த்தைகள் (JEC)

இலங்கையின் இரு தரப்பு வர்த்தக உறவுகளினைப் பொறுத்த வரையில், வர்த்தக திணைக்களமானது, முக்கிய வர்த்தக பங்காளர்களுடன் இணைந்து தாபித்த வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு ஆணைக்குழுக்களுக்கான கேந்திர நிலையமாக வர்த்தக திணைக்களம் தொழிற்பட்டு வருகின்றது. வர்த்தக திணைக்களமானது, கூட்டு ஆணைக்குழுக்களின் தீர்மானங்களினை வகுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அமுலாக்கல் நிலையிலிருந்து கூட்டு ஆணைக்குழுக்களின் கீழான இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகளினை நடாத்துவதற்குத் தேவையான அனைத்து தொழிற்பாடு களினையும் நிறைவேற்றி வருகின்றது. இத்தகைய கூட்டு ஆணைக்குழு உடன்படிக்கைகள் இத்தகைய நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகளினை விருத்தி செய்வதற்கும் விரிவாக்குவதற்குமான வசதிகளினை ஏற்படுத்துக் கொடுத்துள்ள அதேவேளையில் வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளில் தொழில்நுட்ப மற்றும்

பொருளாதார ஒத்துழைப்புக்கான ஊக்குவிப் பினையும் வழங்கியுள்ளன. வர்த்தக திணைக்களமானது, குறித்த மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் அமைச்சர்கள் / செயலாளர்கள் / சிரேஷ்ட அதிகாரிகள் மட்டத்தில் நடாத்தப்பட்ட பின்வரும் கூட்டு ஆணைக்குழுக்கள்/ குழுக்களின் கூட்டங்களினை ஒருங்கிணைத்து நடாத்தியுள்ளது.

### 4.5.1 2017 ஒக்டோபர் 24-26 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட வர்த்தக, பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான இலங்கை - ரஷிய அரசாங்க ஆணைக் குழுவுக்கிடையிலான 2ஆவது அமர்வு

வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான இலங்கை – ரஷிய அரசாங்கங்களுக்கிடையிலான ஆணைக்குழுவின் 2ஆவது அமர்வு 2017 ஒக்டோபர் 24 – 26 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்டது. அமர்வானது இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் மற்றும் ரஷிய சம்மேளத்தின் விவசாய பிரதி அமைச்சர் மீன்பிடிக்கான கூட்டமைப்பின் முகவராண்மைத் தலைவர் ஆகியோரினால் தலைமை வகிக்கப்பட்டது. அமர்வின் போது, இரண்டு தரப்புக்களும், வர்த்தகம் (சந்தை அணுகுமுறை தொடர்பான பிரச்சனைகள்), பொருளாதார ஒத்துழைப்பு (இருதரப்பு உடன்படிக்கைகள், தர நிர்ணயத்துறையில் கூட்டிணைவு, போன்றவை), முதலீடு, விமானப் போக்குவரத்து, தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் மீன்பிடி என்பவற்றுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளதுடன் பரஸ்பரம் குறித்த விடயங்களில் ஒத்துழைக்கவும் உடன்பட்டுக் கொண்டன.

### 4.5.2 2017 ஒக்டோபர் 30 இலிருந்து 31 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்ட இலங்கை – கட்டார், கூட்டுப் பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2 ஆவது அமர்வு

கட்டார் மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான உடன்படிக்கையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இலங்கை – கட்டார் கூட்டுப் பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது 2017 ஒக்டாபர் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் கொழும்பில் அதன் 2 ஆவது அமர்வினை நடாத்தியுள்ளது.

கட்டார் தூதுக்குழுவிற்கு மாண்புமிகு பொருளாதார மற்றும் வர்த்தக அமைச்சர், செயிக் அஹமட் பின் ஜஸிம் பின் மொஹமட் அல் தானி தலைமை தாங்கிய அதேவேளையில் இலங்கைத் தூதுக்குழுவிற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதியுதீன் தலைமை தாங்கினார். இரண்டு தரப்புக்களும் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இலங்கை ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசே அவர்களினால் கட்டாருக்கான விஜயம் 2017 ஒக்டோபர் 25 – 26 வரையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த விஜயத்தின் போது, இரண்டு தரப்புக்களும் LNG, விமானப் போக்குவரத்து, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் விவசாயம் போன்ற நான்கு விதித்துரைக்கப்பட்ட துறைகளில் இலங்கைக்கும் கட்டாருக்குமிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பினை விரிவாக்குவது தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளன. அவை வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற்றும் மின்சக்தியும் வலுவும், போக்குவரத்தும் உள்ளக கட்டமைப்பும், விவசாயம் மற்றும் சுற்றாடல், தொழில் கல்வி, விளையாட்டுக்களும் கலாச்சாரம் போன்ற ஏனைய பல்வேறு துறைகளினையும் உள்ளடக்கியுள்ளது. ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வின் நோக்கம், இரண்டு நாடுகளுக்குமிடையில் நட்புணர்வினைப் பேணுவதும் நீண்டகால உறவுகளை வலுப்படுத்துவதுமேயாகும். இரண்டு நாடுகளுக்குமிடையில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் அவற்றின் இருதரப்பு வர்த்தகத்தினை மேலும் விரிவாக்குவதற்கு ஆக்கபூர்வமானதாக அமைகின்றன.

## 5. பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு

இலங்கையானது அதன் பிராந்திய வர்த்தகம் மற்றும் APTA, SAPTA, SAFTA, BIMSTEC மற்றும் IORA எனும் பெயருடைய பொருளாதார ஏற்பாடுகளில் தொடர்ந்தும் பிரதான பாத்திரத்தினை வகித்து வருகின்றது.

### 5.1 ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை தொடர்பான (APTA) பேச்சுவார்த்தைகளினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல்

1975 கைச்சாத்திடப்பட்டு முதலாவது பாங்கொக் உடன்படிக்கை என அழைக்கப்பட்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது (APTA) 2005 நவம்பர் 2 அம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் வரிச் சலுகைகள் தொடர்பான மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அது 2006 செப்ரெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

APTA–04 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான குழுவின் கீழான பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாக APTA இன் எதிர்கால தீர்மானங்கள் தொடர்பான அறிவுறுத்தல்களினை வழங்குதல் மற்றும் 04 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளினை முறையாக நிறைவு செய்தல் போன்ற நோக்கங்களுக்காக பாங்கொக்கில் 2017 ஜனவரி 13 ஆம் திகதிய்னறு நடாத்தப்பட்டது. அமைச்சர்கள் இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றங்களின் சம்மேளனத்தினால் முன்மொழியப்பட்டு நிலையியல் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டவாறு வர்த்தக மற்றும் கைத்தொழில்கள் மன்றமான APTA இனைத் தாபிப்பதற்கு உடன்பட்டுக் கொண்டுள்ளனர். கௌரவ. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரானவர் வர்த்தக திணைக்களத்தின் அலுவலர்கள் உள்ளடங்கலான APTA இன் 4 ஆவது அமைச்சர்கள் மட்டத்திலான தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கினார்.

வர்த்தக திணைக்களத்தினால் தலைமை வகிக்கப்பட்ட, 2017 செப்ரெம்பர் 28 – 29 ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்தப்பட்ட நிலையியல் குழுவின் 51 ஆவது கூட்டத்தில், 2018.01.01 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் 04 ஆவது சுற்று சலுகை வசதிகளினை அமுலாக்குவதற்கு பங்குபற்றிய நாடுகள் (PSs) உடன்பட்டுக் கொண்டன. பங்களாதேஷ் மற்றும் சீனா ஆகிய நாடுகள், உற்பத்தி நாட்டுச சான்றிதழ் வடிவத்திற்கான தொழில்நுட்ப மீளாய்வுகள், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருள் விதித்துரைத்தல் சட்டவிதிகள் மற்றும் 04 ஆவது சுற்று இணக்கப்பாடுகளினை அமுலாக்குதல் என்பன உள்ளடங்கலான APTA இன் 2 ஆவது திருத்தத்திற்கான அவர்களின் ஆவணங்களினை ஏற்றுக் கொள்ளுதல் / ஒப்புதலளிக்கும் தமது ஆவணங்களினை வைப்புச் செய்துள்ளன. இலங்கையினைப் பொறுத்தவரையில், 04 ஆவது சுற்று இணக்கப்பாடுகளினை அமுல்படுத்துவதற்கான அங்கீகாரம் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அது கிடைக்கப் பெற்றதும், இராஜதந்திர வழிமுறைகளினூடாக ஏற்றுக்கொள்ளும் / ஒப்புதலளித்தலளிக்கும் ஆவணங்கள் முறையாக வழங்கப்படும்.

### 5.2 தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் (SAFTA) கீழான பேச்சுவார்த்தைகளினைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல்

தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA) 2004 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டு 2006 ஜனவரியிலிருந்து அமுலுக்கு வந்தது. தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமானது (SAFTA)ஆனது 1995 இல் தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் (SAPTA) தாபித்தலுடன்

ஆரம்பித்த முன்னுரிமை வர்த்தக ஊக்குவிப்பினூடாக பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை மேலும் விரிவாக்குவதனை நோக்காகக் கொண்டது.

1993 ஏப்பிரல் 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்ட தென்னாசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையானது (SAPTA) 1995 டிசம்பர் 7 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்துள்ளதுடன் அதன் முதல் நடவடிக்கையானது பிராந்தியங்களுக்கிடையில் சுதந்திரமான வர்த்தகம் நோக்கியதாக இருந்தது. முன்னுரிமை சார்ந்த வர்த்தக ஊக்குவிப்பினூடாக பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பினை மேலும் விரிவாக்கும் நோக்குடன் SAPTA நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக தென்னாசிய சுதந்தர வர்த்தகப் பிரதேசம் (SAFTA) தொடர்பான உடன்படிக்கையானது இஸ்லாமாபாத்தில் நடாத்தப்பட்ட 12 சார்க் மாநாட்டின் போது 2004 ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டதுடன் இது 2006 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது. இதன்காரணமாக, SAPTA இன் கீழான தரிவு முன்னுரிமைகள் குறைவடைந்துள்ளதுடன் SAFTA இனால் பதிலீடு செய்யப்பட்டது. SAARC உறுப்பு நாடுகள் சுதந்திர வர்த்தகப் பிரதேசம், , சுங்க யூனியன், பொதுவான சந்தை மற்றும் பொதுவான பொருளாதார மற்றும் நாணய சங்கம் என்பவற்றினைச் சிறப்பு உறுபினர்களாகக் கொண்டிருக்கும் தென்னாசிய பொருளாதார கூட்டமைப்பினைத் தாபிப்பதன் மூலம் பிராந்தியத்தின் பொருளாதார ஒருங்கிணைப்பினை ஸ்திரமிக்கதாக ஏற்படுத்துவதற்கு எண்ணியுள்ளன. இந்த இணக்கப்பாடானது 2014 இல் நடாத்தப்பட்ட 18 ஆவது சார்க் மாநாட்டில் புதுப்பிக்கப்பட்டது.

SAFTA வர்த்தக சுதந்திரமளித்தல் தீர்மானங்கள் கட்டம் கட்டமாக அமுல்படுத்தப்பட்டன. நெகிழ்வுத்தன்மைப் பட்டியல் தவிர்ந்த பொருட்களின் மீது அதன் வர்த்தக சுதந்திரமளித்தல் நிகழ்ச்சித்திட்ட (TLP) சுங்கத் தீர்வைகளின் கீழ் படிப்படியாக்க குறைவடைந்துள்ளதுடன் 2016 ஆம் ஆண்டளவில் அதாவது 10 வருட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படும். அதற்கிணங்க, இலங்கையானது 2015 நவம்பர் 21 ஆம் திகதியன்று TLP இன் முதல் கட்டத்தில் வர்த்தக சுதந்திரமளித்தல் இணக்கப்பாட்டினைப் பூர்த்தி செய்துள்ளது.

இரண்டாம் கட்டத்தில், SAFTA உடன்படிக்கையின் உறுப்புரை VII 3 (ஆ) உடன் இணங்கிய வகையில், உறுப்பினர்களின் முறையான நெகிழ்வுப் பட்டியல்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் அனைத்து உறுப்பினர்களினாலும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ள அவர்களின் ஆரம்ப நெகிழ்வுப் பட்டியல்களினை குறைந்தது 20% இனால் குறைப்பதற்கு உடன்பட்டுக் கொண்டார்கள். அதற்கிணங்க, இலங்கையானது குறைவிருத்தி நாடுகளுக்கான மூல நெகிழ்வுப் பட்டியல்களினை 1042 இலிருந்து 837 இற்கும் 2014 இல் குறைவிருத்தியல்லா நாடுகளுக்கு 963 இற்கும் குறைத்துள்ளன. நெகிழ்வுப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் மீதான சுங்கத் தீர்வை கழிப்பனவானது 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்படவுள்ளதுடன் இலங்கையானது இதனை 2018 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்ய வேண்டும். SAFTA கட்டம்111 இன் கீழ், நெகிழ்வுப் பட்டியலின் கழிப்பனவினை , 2015 இல் 20% இனால் மேலும் குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த முன்மொழிவானது ஏற்றுக் கொள்ளப்படவோ அல்லது அமுல்படுத்தப்படவோ இல்லை.

மீளாய்வு காலப்பகுதியில் SAPTA/SAFTA பேச்சுவார்த்தைகள் தொடர்பான நிலையான அபிவிருத்திகள் இடம்பெறவில்லை.

SAFTA இன் கீழ் இலங்கையின் வர்த்தகமானது மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய சார்க் பிராந்தியத்திலுள்ள பிரதான வர்த்தக பங்காளி நாடுகளுடன் இரண்டு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் வர்த்கமானது முன்னேற்றமடைந்துள்ளது.

2017 ஜனவரியிலிருந்து நவம்பர் வரையிலான காலப்பகுதியில், SAPTA இன் கீழ் இலங்கையில் ஏற்றுமதியானது 4.10 மில்லியன் அமெரிக்க டொலரினைப் பதிவு செய்துள்ள அதேவேளையில் இது 2016 ஆம் ஆண்டில் 3.40 மில்லியனாக இருந்துள்ளது. 2016 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது சிறியளவிலான அதிகரிப்பினைக் காட்டுகின்றது. SAPTA இன் கீழான பிரதான ஏற்றுமதி பொருளாக ஒட்டாத இறப்பர் சீற்கள் (HS 400821) விளங்குகின்றது. அதனைத் தொடர்ந்து நெசவுத் துணி (580620) விளங்குகின்றது. அதே காலப்பகுதியில், SAFTA ஏற்றுமதியானது, 2016 மற்றும் 2017 (ஜனவரி - நவம்பர்) ஆம் ஆண்டு காலப்பகுதியில் முறையே 7.52 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் 37.61 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் காணப்பட்டன. 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்த ஏற்றுமதிகளில் 80% இனைப் மிளகு வகிக்கின்றது.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது SAFTA இன் உற்பத்தி நாட்டுச் 687 சான்றிதழ்களினையும் SAPTA இன் கீழ் இன்னொரு 267 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினையும் வழங்கியுள்ளது.

## 5.3 புதிய பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மீதான பேச்சுவார்த்தைகள்

### 5.3.1 பல் துறைசார் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா ஆரம்பிக்குகை (BIMSTEC)

பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மியான்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகளினைக் கொண்டுள்ள பல்துறை தொழில்நுட்ப மற்றும்பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா ஆரம்பிக்குகையானது (BIMSTEC) அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகளினை விரிவாக்குவதனையும் பிராந்தியங்களுக்கிடையில் சிறந்த பொருளாதார உறவுகளை தாபிப்பதனையும் நோக்காக கொண்டுள்ளது.

மூன்றாவது பிம்ஸ்ரெக் மாநாடு, 14 ஆவது பிம்ஸ்ரெக் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு மற்றும் 16 ஆவது பிம்ஸ்ரெக் சிரேஸ்ட அதிகாரிகளின் கூட்டம் என்பன மியான்மார், நே பியி ரோ இல் மார்ச் 1 - 4 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டது.

அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில், அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் பிம்ஸ்ரெக்கிலுள்ள முன்னுரிமை விடயங்களின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்துள்ளதுடன் பின்வரும் ஆவணங்களில் அவர்கள் கையெழுத்திடுவதற்கான தமது சம்மதத்தினையும் தெரிவித்துள்ளார்கள்;

- பிம்ஸ்ரெக் நிரந்தர செயலகத்தினை தாபிப்பது தொடர்பான அமைப்பு அகவிதி
- பிம்ஸ்ரெக் கலாச்சார கைத்தொழில்கள் ஆணைக்குழு மற்றும் பிம்ஸ்ரெக் கலாச்சார கைத்தொழில் அவதானிப்பு நிலையமொன்றிதை தாபிப்பது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை
- வானிலை மற்றும் காலநிலைக்கான பிம்ஸ்ரெக் நிலையமொன்றினைத் தாபிப்பது தொடர்பில் பிம்ஸ்ரெக் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான அமைப்பு அகவிதி

சிரேஷ்ட அதிகாரிகளின் கூட்டத்தில், அடுத்த வர்த்தக மற்றும் பொருளாதார அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தின் போது பின்வரும் உடன்படிக்கைகளினைக் கைச்சாத்திடுவதற்கு உடன்பாடு காணப்பட்டது;

- பிம்ஸ்ரெக் சுதந்திர வர்த்தக பிரதேசம் (FTA) மீதான சட்ட ரீதியான உடன்படிக்கையின் பொருட்களின் வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை
- பிம்ஸ்ரெக் சுதந்திர வர்த்தக பிரதேசம் மீதான சட்ட ரீதியான உடன்படிக்கையினைத் திருத்துவதற்கான மரபுச் சீர்முறைமை

- பிணக்குத் தீர்வு நடைமுறைகள் மற்றும் சட்டரீதியான உடன்படிக்கை மீதான பொறிமுறைமை மீதான உடன்படிக்கை
- சுங்க விடயங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவுகை தொடர்பான உடன்படிக்கை

இலங்கையின் வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டமானது (TLP), உறுப்பு நாடுகளினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்புக்கமைவாக, அக்கறைதாரர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வகுக்கப்பட்டது. அதற்கிணங்க, வர்த்தக சுதந்திர நிகழ்ச்சித்திட்டமானது BIMSTEC செயலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதேவேளையில், BIMSTEC செயலகமானது BIMSTEC சுதந்திர வர்த்தக பிரதேசத்தின் கீழான மூல விதிகள் மற்றும் தொழிற்பாட்டு மற்றும் சான்றுப்படுத்தல் நடைமுறைகளின் நகல் வரைபு மற்றும் தற்போது இடம்பெற்று வருகின்ற உறுப்பினர்களின் கருத்துரைகள் மற்றும் அவதானங்களுக்கான BIMSTEC பிராந்தியத்திற்கான வர்த்தக வசதிப்படுத்தல் மீதான உடன்படிக்கை என்பவற்றினை வழங்கியுள்ளது.

### 5.3.2 இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பு (IORA)

இந்து சமுத்திர கரையோர கூட்டமைப்பானது (IORA), அரசாங்கம், வியாபாரம் மற்றும் கல்விசார்ந்த குழு என முப்பிரிவுகளைக் கொண்டதும் அவற்றிற்கிடையேஒத்துழைப்பினையும் நெருங்கிய தொடர்பினையும் பேணி வருகின்ற இந்து சமுத்திர கரையோர நாடுகளுக்கிடையலான பிராந்திய கூட்டமைப்பாகும். வர்த்தகம் மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழு (WGTI), இந்து சமுத்திர கரையோர வியாபாரக் கூட்டமைப்பு (IORBF), மற்றும் இந்து சமுத்திர கரையோர கல்விசார்ந்த குழு (IORAG) எனும் பெயரிலான அக்கறைதார்களின் குழு தொடர்பில் மூன்று தொழிற்படு குழுக்கள் இருந்துள்ளன.இந்து சமுத்திர கரையோரக் கூட்டமைப்பினால் (IORA) அடையாளங் காணப்பட்டுள்ள முன்னுரிமை வாய்ந்த விடயங்கள் பின்வருமாறு. (i) கடற் பயண பாதுகாப்பு (ii) வர்த்தக மற்றும் முதலீட்டு வசதிப்படுத்தல், (iii) மீன்பிடி முகாமைத்துவம், (iv) பேரிடர் முகாமைத்துவம், (V) கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (vi) சுற்றுலா மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள் (vii) இன வலுவூட்டல் (viii) நிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காகவும் பிராந்தியம் மற்றும் அங்கத்துவ நாடுகளின் மீதியாயுள்ள அபிவிருத்தி மற்றும் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்காக பொது அமைப்பொன்றினை உருவாக்குதல்.

2017 இல் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வுகளில், IORA அதன் 20 ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது மிக முக்கியமானதொன்னளாகும். தற்போது தலைமைப் பொறுப்பினை வகிக்கும் இந்தோனேசியா "இந்து சமுத்திரத்தினை அமைதியானது நிலையானதும் வளம்மிக்கதுமாக ஆக்குவதற்காக கடல்லழி ஒத்துழைப்பினை வலுவாக்குதல்" எனும் தொனிப் பொருளில் ஜகார்த்தாவில் 2017 மார்ச் 7 ஆம் திகதியன்று முதன் முறையாக IORA தலைவர்கள் மாநாட்டினை நடாத்துவதற்கான அனுசரணையினை வழங்கியிருந்தது. அதிமேதகு ஜனாதிபதி, மைத்திரிபால சிறிசேன அவர்கள் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

17 ஆவது IORA அமைச்சர்களின் பேரவைக் கூட்டமானது (COM) தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் ஒக்டோபர் 14 – 18 வரையில் நடாத்தப்பட்டது. அமைச்சர்களின் பேரவைக் கூட்டம் இடம்பெற்ற வேளையில், IORA வர்த்தக மாநாட்டின் (IORBF) 23 ஆவது கூட்டம் ஒக்டோபர் 14 ஆம் திகதியும், வர்த்தக மற்றும் முதலீடு மீதான தொழிற்படு குழுவின் (WGTI)17 ஆவது கூட்டம் ஒக்டோபர் 15 ஆம் திகதியும், சிரேஷ்ட அதிகாரிகளின் (CSO) 19 ஆவது கூட்டம் ஒக்டோபர் 16 - 17 ஆம் திகதிகளிலும், 4 ஆவது இந்து சமுத்திர பேச்சுவார்த்தைகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அபுதாபியில் ஒக்டாபர் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

### 5.3.3 சேவை வர்த்தகம் மீதான சார்க் உடன்படிக்கை (SATIS)

அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள், பூட்டானில் 2010 ஏப்பிரலில் நடாத்தப்பட்ட 16 ஆவது சார்க் மாநாட்டில் சேவை வர்த்தகம் மீதான சார்க் சட்டரீதியான உடன்படிக்கையில் (SATIS) கைச்சாத்திட்டார்கள். அனைத்து நாடுகளும் இந்த உடன்படிக்கையினை திருத்தியமைத்துள்ளதுடன் SATIS இன் கீழ் தேசிய இணக்கப்பாட்டு அட்டவணைகளினைப் பூர்த்தி செய்யும் செயல்முறைகளும் இடம்பெற்றுள்ளன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் SATIS மீதான நிபுணர் குழு கூட்டங்கள் எதுவும் நடாத்தப்படவில்லை.

SATIS இன் கீழ் இலங்கையின் சேவைகள் வழங்கலுக்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் SAARC செயலகமானது SATIS இன் கீழான அதன் சேவைகளினை வழங்கத் தயாரக இருந்தமை குறித்து மதிப்பீடு செய்தது. எவ்வாறாயினும், உடன்படிக்கையின் இறுதி வடிவமானது அவர்களின் SATIS வாய்ப்புக்களுடன் தயாராகவுள்ளதாக அனைத்து நாடுகளும் அறியத் தந்தால் மட்டுமே விநியோகிக்கப்படும்.

## 5.4 <u>வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமை (GSTP)</u>

வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை தொடர்பான உடன்படிக்கையானது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கிடையில் 1989 இல் தாபிக்கப்பட்டது. GSTP ஆனது தெற்கு – தெற்கு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UNCTAD) கீழ் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட தரிவு முன்னுரிமை முறைமையாகும்.
GSTP உடன்படிக்கையின் உறுப்புரை 30 இன்படி, 2017 ஆகஸ்டிலிருந்து பயனுறுதியாகும் வகையில் கொலம்பியா வாபஸ் பெறும் வரையில் 43 GSTP உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

இதுவரையில், GSTP உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின மூன்று சுற்றுக்கள் நடாத்தப்பட்டுள்ளன. பிறேசில் சாவோ பாலோவில் நடாத்தப்பட்ட UNCTAD XI இன் போது 2004 இல் ஆரம்பிக்கப்பட்ட சாவோ போலோ சுற்றானது 2010 இல் நிறைவு செய்யப்பட்டது. 22 GSTP உறுப்பினர்கள் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் சாவோ பாலோ சுற்றில் பங்குபற்றியிருந்தார்கள். அவர்களில் 2010 இல் சாவோ பாலோ மூன்றாம் சுற்றின் இறுதி மரபுச் சீர்முறையில் 11 உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளார்கள். அத்தகைய 11 நாடுகளில் கியூபா, இந்தியா, மலேசியா மற்றும் உருகுவே(மெர்சாகரின் பகுதி) ஆகியன இதுவரையில் மூன்றாவது சுற்று வர்த்தக உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டுள்ளன. GSTP இன் உறுப்பிராக இருக்கும் இலங்கையானது மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் 22 நாடுகளுடன் இணைந்து பங்குபற்றியுள்ள போதிலும், சாவோ பாலோ மரபுச் சீர்முறைமைக்கு அங்கீகாரம் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை.

# 6. வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு

## 6.1 வெளிநாட்டு வர்த்தக பிரதிநிதித்துவம்

வர்த்தக திணைக்களத்தின் வர்த்தகசார் பிரதிநிதித்துவமானது வெளிநாடுகளிலுள்ள 28 தூதரங்களிலுள்ள 30 உத்தியோகத்தர்களினைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளில் விசேட கவனம் செலுத்துவதுடன் அனுசரணை நாடுகளில் இலங்கையின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களினை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். வர்த்தக உத்தியோகத்தர்கள் “அரச – தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்” எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பரந்தளவிலான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். வர்த்தக திணைக்களமானது வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கையிலுள்ள ஏனைய வியாபார ஆதரவு நிறவனங்களின் உதவுகையுடன் இலங்கை ஏற்றுமதிகளுக்கான சர்வதேச சந்தை வாய்ப்புக்களை மேலும் விரிவாக்குவதற்கும் பல்வகைப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளினை ஒழுங்கமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றது. வர்த்தக உத்தியோகத்தர்கள் முன்னணி ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான சர்வதேச சந்தை பங்கினை விரிவாக்குவதனூடாக புதிய ஏற்றுமதி சந்தை வாய்ப்புக்களினை அறிமுகப்படுத்துவதனை பிரதானமாக நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற அதேவேளையில் தற்போதிருக்கும் சந்தைகளில் மிகவும் சுமுகமான சூழ்நிலையினை உருவாக்குவதிலும் அயராது உழைத்து வருகின்றனர். அத்துடன் வர்த்தக உத்தியோகத்தர்கள் சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களுக்கான சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்படும் பிரதான தொழிற்பாடுகள் பின்வருவனவற்றினையும் உள்ளடக்குகின்றன.

- இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களினை இனங்காண்பதற்காக சந்தைமதிப்பாய்வுகள் / புலனாய்வுகள் என்பவற்றினை மேற்கொள்ளுதல்
- அனுசரணை வழங்கம் நாட்டின் வர்த்தக கொள்கை மாற்றங்கள், குறிப்பாக, தரிவு மற்றும் தரிவல்லா நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணித்தலும் அறிக்கையிடுதலும்.
- முக்கியமான சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் / நிகழ்வுகளில் இலங்கையின் பங்குபற்றுதலினை ஏற்பாடு செய்தல். இந்தச் செயற்பாடானது, இலங்கையின் ஏற்றுமதிகளினை மேம்படுத்துவதில் மிகவும் வினைத்திறன் வாய்ந்த நடவடிக்கைகளில் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது.
- இலங்கையில் நடாத்தப்படுகின்ற கண்காட்சிகள் / நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு வெளிநாட்டு வர்த்தகத் தூதுக்குழுக்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல்.
- அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கை தொடர்பான ஊக்குவிப்பு (தனியொரு நாடு) நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்
- இலங்கைக்கு விஜயம் செய்வதற்கும் அவ்வாறே வியாபார வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கும் வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த தூதுக்குழுக்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல்.
- வர்த்தகம் சார்ந்த வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கு இலங்கைக்கும் இலங்கையிலிருந்தும் தனிநபர் வியாபார விஜயங்களை ஏற்பாடு செய்தல்
- அனுசரணை வழங்கும் நாட்டிலுள்ள வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய அரசாங்க அதிகாரிகளுடன் வலையமைப்பினைப் பேணுதல் மற்றும் இலங்கையின் வர்த்தகசார் மற்றும் பொருளாதார நலன்களுடன் தொடரபுடைய விடயங்கள் / பிரச்சனைகளுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட அரசாங்க மற்றும சர்வதேச நிறுவனங்களில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.

| | செயற்பாடு | | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | அனுசரணை வழங்கும் நாடுகளில் நடாத்தப்பட்ட விசேட (தனி நாடு) ஊக்குவிப்பு பிரச்சார நடவடிக்கைகள் | | 102 |
| 2 | இலங்கைக்கு வருகை தந்த தூதுக்குழுக்கள் | தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | 68 |
| | | பேராளர்களின் எண்ணிக்கை | 466 |
| 3 | அனுசரணை வழங்கும் நாட்டிற்கான தூதுக்குழுக்கள் | தூதுக்குழுக்களின் எண்ணிக்கை | 137 |
| | | பேராளர்களின் எண்ணிக்கை | 1438 |
| 4 | இலங்கைக்கான தனிநபர்களின் விஜயம் | | 210 |
| 5 | அனுசரணை வழங்கும் நாட்டிற்கான தனிநபர்களின் விஜயம் | | 207 |
| 6 | அனுசரணை வழங்கும் நாட்டில் ஊக்குவிக்கப்பட்ட கண்காட்சிகள் | | 92 |
| 7 | இலங்கையில் அனுசரணை வழங்கும் நாட்டிலிருந்தான ஊக்குவிப்புச் சந்தை பங்குபற்றல் | சந்தைகளின் எண்ணிக்கை | 47 |
| | | கண்காட்சியாளர்கள் / வருகைதருநர்களின் எண்ணிக்கை | 499 |
| 8 | வழங்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை (வர்த்தகம் / முதலீடு / சுற்றுலா) | | 1,918 |
| 9 | ஆய்வு செய்யப்பட்ட வர்த்தக முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 178 |
| 10 | ஊக்குவிக்கப்பட்ட உற்பத்தித் துறைகளின் எண்ணிக்கை | | 46 |
| 11 | வர்த்தக உத்தியோகத்தர்களினால் விஜயம் செய்யப்பட்ட வர்த்தக சந்தைகளின் எண்ணிக்கை | | 54 |
| 12 | அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கையின் வியாபார வலையமைப்புக் கூட்டங்களில் கலந்து கொள்ளல். | | 77 |
| 13 | சர்வதேச நிறுவனங்கள் மன்றங்களில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் / | | 17 |
| 14 | முதலீட்டு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகள் | | 109 |

### 6.1.1 செயல்நிறைவேற்ற மதிப்பாய்வுப் பகுப்பாய்வு
**ஏற்றுமதி ஊக்குவிப்பு**

தூதுக்குழுக்களினால் வலையமைப்புச் செய்யப்பட்ட கீழே குறிப்பிடப்படும் அனுசரணை வழங்கும் காரணிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுத் தரப்பொன்றிடமிருந்தான கட்டளைகளின் மூலமான வெற்றியானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய காரணிகள் வர்த்தக ஊக்குவிப்பு அலுவலர் ஒருவரின் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற வெளிப்புறக் காரணகளா என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அத்தகைய காரணிகள் பொறுப்பேற்கப்பட்ட ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் வெளியீட்டினை மட்டுப்படுத்துகின்றன.

| நுண்பாக காரணிகள் | பெரும்பாக காரணிகள் |
|---|---|
| கம்பனியின் பொதுவான ஏற்றுமதி தயார் நிலை / அக்கறை | குறைந்த உற்பத்திச் செலவுடனான போட்டி மிக்க பொருளாதாரம் |
| போட்டி விலை (ஏனைய வழங்குனர் களுடனான போட்டி) | தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மட்டத்திலான முதலீட்டு மட்டம் |
| பொருட்களின் தரம் | மூலவள உதவியளிப்பு நாடு |
| வழங்கல் கொள்திறன் – உரிய நேரத்தில் உரிய முறையில் பாரிய கட்டளையினைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் | வர்த்தக வசதிப்படுத்தல் மட்டம் |
| இறக்குமதி செய்யும் நாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகளுடனான இணக்கப்பாடு | செலவின நிதியிடல் கிடைப்பனவு |
| ஊக்குவிப்பு நிதியிடலின் கிடைப்பனவு | |

## 6.2 வர்த்தக சந்தைகளில் பங்குபற்றுதல்:

### 6.2.1 சர்வதேச வர்த்தக சந்தைகளில் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையின் பார்வையாளர் கூடம்:

தகவல் பரிமாற்றத்திற்கான அடித்தளமிடுவதற்காக கைத்தொழில் தொழில்நுட்பம் மற்றும் விசேட தேவைகளின் மட்டத்தினை அதிகரிக்கும் நோக்குடன், வர்த்தக சந்தைகள் வர்த்தகப் பங்காளர்களுக்கான முக்கியமான தகவல் பரிமாற்றம் மற்றும் சந்திக்கும் இடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் கொள்வனவு மற்றும் விற்பனை நடவடிக்கைகளினை முன்னெடுக்கும் வகையில் வினைத்திறன் வாய்ந்த சந்தைகளாக விருத்தி செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச வர்த்தக சந்தைகளில் இலங்கை பங்குபெறுவதன் முக்கியத்துவத்தினைக் கண்டறியும் நோக்குடன் இத்திணைக்களமானது, குறித்த ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற தெரிவு செய்யப்பட்ட சர்வதேச வர்த்தக சந்தைகளில் இலங்கை பங்கு பெறுவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டுள்ளது.

- மொஸ்கோவில் நடாத்தப்பட்ட "World Food 2017" இல் இலங்கைத் தேயிலை, தெங்கு உற்பத்திகள், இலங்கை வாசனைத் திரவியங்கள் மற்றும் கடலுணவு என்பவற்றினைக் காட்சிப்படுத்துவதற்கான நான்கு இலங்கை கம்பனிகள் கலந்து கொண்டன.
- ஜெட்டாவில் நடாத்தப்பட்ட "Foodex Saudi" எனும் வர்த்தகச் சந்தையில் உணவு, மென்பானங்கள் மற்றும் வாசனைத்திரவியத் துறை சார்ந்த ஐந்து இலங்கை கம்பனிகள் கலந்து கொண்டன.
- சுவீடனில் நடாத்தப்பட்ட "நோர்டிக் சேதன உணவுச் சந்தை" இல ஆறு கம்பனிகள் உணவு மற்றும் மென்பானத்துறையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டன.
- வொஷிங்டனில் நடாத்தப்பட்ட "கொஷெர்பெஸ்ட் 2017" இல் இலங்கையின் மூன்று கம்பனிகள்கலந்து கொண்டு தமது உற்பத்திப் பொருட்களுக்கு கொஷர் சான்றிதழ்களினைப் பெற்றுக் கொண்டன.

வர்த்தக சந்தைகளில் இலங்கையின் பங்குபற்றலுக்குச் சமாந்திரமாக, உரிய நாட்டு துதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் கம்பனியின் பெயரினை வெளிக்காட்டுதல் மற்றும் வினைத்திறன்வாய்ந்த வியாபார உறவுமுறைகளினைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றிற்கான வாய்ப்புக்களினை வழங்கும் அத்தகைய நாடுகளின் வர்த்தகப் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் இலங்கையின் பங்குபற்றாளர்களுக்கான வர்த்தக வலையமைப்பு அமர்வுகளினை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தத் திணைக்களத்தின் பணிப்புரையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சர்வதேச வர்த்தக சந்தைகளில் இலங்கையின் பங்கபற்றுதலினை ஏற்பாடு செய்வதற்கு மேலாக, வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் இலங்கை தேயிலைச் சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை போன்ற ஏனைய இலங்கை அதிகாரமையங்களின் ஆதரவுடன் சர்வதேச வர்த்தக சந்தைகளில் இலங்கை பங்குபெறுவதற்கான ஏற்பாடுகளினையும் மேற்கொண்டது.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏனைய இலங்கை அதிகாரிகளின் ஆதரவுடன் வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் கீழ்க்காணும் முக்கிய வர்த்தக சந்தைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- இலங்கைத் தேயிலைச சபை மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றுடன் கூட்டிணைந்து சிட்னியிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரல், சிட்னி, சரடவதேச மாநாட்டு நிலையத்தில் 2017, செப்ரெம்பர் 11 இலிருந்து 14 வரையில் நடாத்தப்பட்ட உணவுக் கண்காட்சியில் இலங்கை பங்குபெறுவதற்கு ஏற்பாடு செய்தார்.

- இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் தனியொரு நாட்டு கண்காட்சியானது ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் பாரிஸிலுள்ள இலங்கை தூதரகம் என்பவற்றின் கூட்டிணைவில் 2017, மே 23 ஆம் திகதியன்றுரொகாடெறோவில் நடாத்தப்பட்டது.

- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கூட்டிணைவுடன் வர்த்தகப் பிரிவானது பாரிஸில் 2017 செப்ரெம்பர் 18 இலிருந்து 21 வரையில் நடாத்தப்பட்ட "Apparel Sourcing Fair" இல் இலங்கை முதன் முதலாக பங்குபெறுவதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டதுடன் இதில் 8 தைத்த ஆடைகளின் ஏற்றுமதியாளர்கள் மற்றும் 3 வடிவமைப்பாளர்கள் ஆகியோர் பங்குபெற்றனர்.

- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது பாகிஸ்தான், கராச்சியிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரலுடன் இணைந்து தளபாடங்கள், பீங்கான் உற்பத்திப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், தேயிலை, கைப்பணிப் பொருட்கள், தெங்கு மற்றும் தெங்கு

அடிப்படையிலான பொருட்கள், ஆடைகள், மூலிகை அழகுசாதனங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் போன்ற துறைகளிலிருந்தான 14 இலங்கை கம்பனிகளுக்கு "எக்ஸ்போ பாகிஸ்தான்" இல் பங்குபெறுவதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டது.

உரிய அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கையில் நடாத்தப்பட்ட வர்த்தக சந்தைகளுக்கு பரந்தளவிலான விளம்பரங்களினை மேற்கொண்டுள்ளதுடன் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கான வியாபாரம் சார்ந்த வாய்ப்புக்களினைக் கண்டறியும் நோக்குடன் முறையாக உரிய / ஒப்புதல் வழங்கப்பட்ட நாடுகளில் நடாத்தப்பட்ட வர்த்தக சந்தைகளுக்கும் விஜயம் செய்துள்ளார்கள்.

## 6.3. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் ஊக்குவிப்பு

வெளிநாட்டிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டினக் (FDI) கொண்டு வருவதில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் வெளிநாடுகளிலுள்ள பிரதான முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவராணமைகளுடன் உறுதியான வலைமைப்புக்ளையும் தொடர்புளையும் ஏற்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், அவர்கள் இலங்கையில் தயாரிப்புக் கைத்தொழற்சாலைகளின் விரிவாக்கத்திற்கான உள்ளார்ந்த கூட்டு தொழில்முயற்சிப் பங்காளர்களினை இனங்காண்பதற்காக இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் வியாபார தூதுக்குழுக்கள் ஒவ்வொன்றும் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

அதற்கிணங்க, மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் உள்ளார்ந்த முதலீட்டாளர்களை உரிய சந்தைகளில் சந்தித்து இலங்கையில் கிடைக்கக்கூடிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளித்துள்ளனர்.

- சுவீடன் தூதரகமானது இலங்கையில் அதன் எதிர்கால முதலீடுகளினை மேற்கொள்வது தொடர்பில் உண்மையினைக் கண்டறியும் ஆய்வினை மேற்கொள்வதற்காக, 2017, பெப்ரவரி 20 இலிருந்து 23 வரையில் இலங்கைக்கு IKEA கம்பனி விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டிருந்தது. இதன்பின்னர், IKEA கம்பனியானது குறித்த ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் இரண்டு தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கையிலுள்ள உற்பத்தி கம்பனிகளுடன் பல்வேறு சந்திப்புக்களை நடாத்தியுள்ளது. அவர்கள் இலங்கையிலிருந்து இறப்பர் பொருட்களினைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டியுள்ளதுடன் அவர்கள் லலான் இறப்பர் தனியார் லிமிட்டட் மற்றும் டெல்மேஜ் போர்ஸித் அன்ட் கம்பனி லிமிட்டட் போன்ற தொழிற்சாலைகளுக்கும் அவ்வாறே இறப்பர் மரத் தளபாடங்களுக்கான வியாபாரங்களினைக் கண்டறியும் நோக்குடன் இறப்பர் பெருந்தோட்டத்திற்கும் விஜயம் செய்துள்ளனர்.
- இலங்கையில் வியாபாரத் தளமொன்றினைத் தாபிப்பதில் ஆர்வமுடைய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கம்பனியுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. எதிர்பார்க்கப்படும் முதலீடு 500,000/- அமெரிக்க டொலர்களாகும். ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கம்பனியிலிருந்து பெறப்பட்ட வியாபார முன்மொழிவுகள் இலங்கை முதலீட்டுச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் குறித்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கம்பனியானது இலங்கையில் அவர்களது கம்பனியினை தாபிப்பது தொடர்பான சாத்தியக் கூறுகளினை அறிந்து கொள்ளும் நோக்குடன் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள்.

- 2017 சிட்னியில் இலங்கை முதலீட்டாளர் மன்றத்தில் முதலீடு – இலங்கை பிணையங்கள் மற்றும் நாணயமாற்று ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் என்பன அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் ஒருங்கிணைந்து இலங்கைக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பது தொடர்பில் வீதி நாடகங்களினை ஏற்பாடு செய்திருந்தன. இலங்கை முதலீட்டாளர் மன்றமானது 2017 மார்ச் 20 ஆம் திகதியன்று சிட்னியில் நடாத்தப்பட்டதுடன் 150 இற்கும் மேற்பட்ட நிதி முகாமையாளர்கள் மற்றும் DFAT இலிருந்தான அவுஸ்திரேலிய அரசாங்க அதிகாரிகளுடன் இணைந்து இலங்கையின் புலம்பெயர்ந்தோரும் கலந்து கொண்டார்கள்.

- இலங்கைக்கு தூதுக்குழுக்கள் விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் கொன்சுலேற்றின் உதவுகையுடன் அவுஸ்திரேலிய – இலங்கை வர்த்தக மன்றங்கள் மேற்கொண்டன. இலங்கைக்கு விஜயம் செய்த எட்டு உறுப்பினர்களினைக் கொண்ட தூதுக்குழுவானது ஏறக்குறைய 500,000 மில்லியன் அவுஸ்திரேலிய டொலரில் இலங்கையின் தகவல் தொழில்நுட்ப கம்பனிகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதுடன் தகவல் தொழில்நுட்பத் துறையில் 15 வேலைவாய்ப்புக்களினையும் வழங்கியுள்ளது.

- எகிப்திலுள்ள இலங்கை தூதரகமானது எகிப்தில் புதிய முதலீட்டில் இலங்கையின் சாம்சன் கொம்பவுண்ட் கம்பனிக்கும் எகிப்திய ஹெகஸி குழுமத்திற்குமிடையில் கூட்டு முயற்சிக் கருத்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கான ஒத்துழைப்பினை வழங்கியுள்ளது. இந்த உற்பத்தித் துறையானது எகிப்து மற்றும் ஆபிரிக்காவின் ஏனைய பகுதிகளில் வாகனக் கைத்தொழிலுக்கு இறப்பரினாலான வாகன உதிரிப்பாகங்களினை வழங்குவது குறித்து கவனம் செலுத்தியுள்ளது. இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ள கூட்டு முயற்சிக்கு ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள வாகனத் தயாரிப்பாளர்களுக்கான ஹெகஸி குழுமத்தின் சந்தை அணுகுமுறையின் அனுகூலத்தினைப் பெற முடிவதுடன் டிஎஸ்ஜ நிறுவனத்திற்குத் தேவையான இறப்பரினை அடிப்படையாகக் கொண்ட வாகன உதிரிப்பாகங்களினை எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பான தொழில்நுட்ப அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

- டோக்கியோவிலுள்ள வர்த்தகப் பிரிவானது, ஜப்பானிலுள்ள முன்னணி தேயிலை இறக்குமதி செய்யும் கம்பனியான எம்/எஸ் குனிராறோ கம்பனியுடன் கூட்டமொன்றினை நடாத்தியுள்ளது. கம்பனியானது இலங்கையிலிருந்து சேதன முறையிலான பச்சைத் தேயிலையினை இறக்குமதி செய்வதற்கு மிகவும் ஆர்வத்துடன் உள்ளது. கம்பனியானது ஜப்பானிய சந்தைத் தேவைப்பாடுகளுடன் ஒருங்கிணைந்த வகையிலான உற்பத்தியினைப் பெற்றுக் கொள்வதற்கு தற்போதுள்ள உற்பத்தி வரிசைகளினை விருத்தி செய்வதற்கான இயந்திரங்களில் முதலீடு செய்வதற்கும் மிகுந்த விருப்பத்தினைக் கொண்டுள்ளது. கம்பனியானது, இலங்கை தேயிலைச் சபையின் உதவுகையுடன் இரண்டு பிரதான சேதன தேயிலைக் கம்பனிகளுடன் (எம்/எஸ் பயோபூட்ஸ் மற்றும் எம்/எஸ் கிறீன்பீல்ட் பயோ பிளான்ரேஷன்) தொடர்பினை ஏற்படுத்துவதற்குத் தூதரகம் உதவியளித்துள்ளது. ஜப்பானிய நிறுவனம் நவம்பர் மாதம் ஸ்ரீ லங்காவைப் பார்வையிட திட்டமிட்டுள்ளது.

- பிரித்தானிய இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திலுள்ள வர்த்தக உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட உதவகையினைத் தொடர்ந்து மார்க்ஸ் அன்ட் ஸ்பென்சருக்காக வேலை செய்கின்ற பிரித்தானிய முதலீட்டாளர் ஒருவர் 250 ஊழியர்களுடன் கற்பிட்டியிலுள்ள தைத்த ஆடைத் தொழிற்சாலையொன்றினை கையகப்படுத்திக் கொண்டார். இந்த தொழிற்சாலையின் தற்போதைய தொழிற்பாடுகளினை விரிவாக்குவதற்கும் எதிர்காலத்தின் மேலும் பல பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார்.

அதே முதலீட்டாளர் குளியாப்பிட்டிக்கு அருகாமையில் இன்னொரு சிறிய தொழிற்சாலையினயும் வைத்துள்ளதுடன் அதன் தொழிற்பாடுகளை மேலும் விரிவாக்கும் நோக்குடன் போதுமான இடவசதியினைக் கொண்ட இன்னொரு அமைவிடத்திற்கு இடமாற்றம் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளார். விரிவாக்கம் சுமார் 125-130 வேலைவாய்ப்பு வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 6.4 சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு

சுற்றுலாத்துறையில் மறைந்துள்ளவற்றினை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கம் நோக்குடன் வர்த்தக உத்தியோகத்தர்களினால் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஆதரவுடன் வெளிநாடுகளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை விமான சேவையானது கண்கவர் சற்றுலா இடமாக இலங்கையினை ஊக்குப்பதற்கான நடவடிக்கையினையும் மேற்கொண்டுள்ளது. சுற்றுலான இடமாக இலங்கையினை ஊக்குவிப்பதற்கு வர்த்தக உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்படும் பிரதான நடவடிக்கைகளில் மாநாடுகள், விசேட கருத்தரங்குகள், உபாயங்கள் மற்றும் சுற்றுலான குழுக்களை ஏற்பாடு செய்தல், சுற்றுலாக ஊக்குவிப்புக்கு இணை அனுசரணை வழங்குதல், ஊடக தூதுக்குழுக்களை மற்றும் FAM பயண ஒழுங்க்களை ஏற்பாடு செய்தல் மற்றும் அனுசரணை வழங்கும் நாட்டிலுள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக விளம்பரங்களை மேற்கொள்ளுதல் என்பனவும் உள்ளடங்குகின்றன.

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் 47 பிரயாண மற்றும் சுற்றுலா கண்காட்சிகளில் இலங்கையைச் சேர்ந்த 500 பிரயாண மற்றும் சுற்றுலாத்துறை கம்பனிகள் அவ்வாறே இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், சிறிலங்கன் எயார் லைன்ஸ் என்பன பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளினை மேற்கொண்டிருந்தார்கள்.

பொதுமக்கள் மற்றும் பிரயாணத்துறை சார்ந்தவர்களுக்கிடையே மிகவும் வினைத்திறன் வாய்ந்த சுற்றுலா ஊக்குவிப்பு கருவியாக வீதி காட்சிப்படுத்தல்கள், நாடகங்கள் என்பன உள்ளடங்கலாக பல்வேறு ஊக்குவிப்பு நிகழ்வுகள், தெரிவு செய்யப்பட்ட நகரத்தில் அரங்கேற்றப்பட்டன. வர்த்தக உத்தியோகத்தர்கள், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், சிறிலங்கன் எயார் லைன் மற்றும் சிறிலங்கன் பிரயாத்துறை ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து இத்தாலி, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் மற்றும் சென்னை ஆகிய நாடுகளின் நகரங்களில் வீதிக் காட்சிப்படுத்தல்கள் மற்றும் நாடகங்கள் என்பவற்றினையும் 34 ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அனுசரணை வழங்கும் நாட்டு பிரயாண முகவர் அல்லது சுற்றுலா ஏற்பாட்டாளர், FAM ஊடக சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் என்போர் சுற்றுலா நாடு என்றவகையில் உற்பத்திப் பொருள் பற்றிய அறிவு மற்றும் / அல்லது நாடு பற்றிய அறிவு என்பவற்றினை அதிகரிப்பதற்கு வினைத்திறனுடன் செயற்படுகின்றனர். ஆகையால், வெளிநாடுகளில் உள்ள SLTPB மற்றும் வர்த்தக உத்தியோகத்தர்கள், பெல்ஜியம், ஜேர்மனி, இத்தாலி, சுவீடன், எகிப்து, மலேசியா என்பன 100 இற்கும் மேற்பட்ட சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், சுற்றுலா முகவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு FAM சுற்றுலாக்களுக்கு அனுசரணை வழங்கியுள்ளார்கள்.

இலங்கைச் சுற்றுலா தொடர்பான வீடியோ தொகுப்புக்கள் பல்வேறு நாடுகளின் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்புச் செய்யப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு சஞ்சிகைகளில் இது தொடர்பில் கட்டுரைகளும் பிரசுரிக்கப்பட்டன.

மேலும், வர்த்தக உத்தியோகத்தர்கள் அனுசரணை வழங்கும் நாட்டில் இலங்கையின் சுற்றுலாத் துறையினை ஊக்குவிக்கும் நோக்குடன் மீளாய்வு காலப்பகுதியில், கலாச்சாரம் சார்ந்த மாலை

நிகழ்வுகள், பிரயாண முகவர்கள் / சுற்றுலா ஏற்பாட்டாளர்களுக்கான செயலமர்வுகள், வருகை தரும் இலங்கை கம்பனிகளுக்கான B2B கூட்டங்கள், சொற்பொழிவுகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளின் போது பிரச்சார துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

## 6.5 வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா தொடர்பான விசாரணைகள் குறித்து உரிய நடவடிக்கைகளினை எடுத்தல்

வர்த்தக திணைக்களத்தின் வர்த்தக உத்தியோகத்தர்கள் உள்நாட்டிலும் அவ்வாறே வெளிநாட்டு வர்த்தகர்களினாலும் எழுப்பப்படுகின்ற வர்த்தக வினாக்கள் தொடர்பில் காத்திரமான பணியினை ஆற்றி வருகின்றனர். வெளிநாடுகளில் பணியாற்றும் வர்த்தக உத்தியோகத்தர்கள் தூதரகங்களின் மூலமாக பெற்றுக் கொள்ளப்படும் வர்த்தக, முதலீட்டு மற்றும் சுற்றுலா தொடர்பான விசாரணைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளினை எடுத்து வருகின்றனர்.

மீளாய்வு காலப்பகுதியில், வர்த்தக உத்தியோகத்தர்கள் அத்தகைய 1918 விசாரணைகளினைப் பெற்றுள்ளதுடன், இலங்கையானது முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையில் கேந்திர முக்கியத்துவம் இடமாக அமைந்திருப்பதால் வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களினை ஊக்குவிக்கும் நோக்குடன் தேவையான வழிகாட்டுதல்களினை வழங்குவதன் மூலம் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு இறக்குமதியாளர்களிடமிருந்து வர்த்தக உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொள்ளப்படும் வர்த்தகம் தொடர்பான விசாரணைகள் உரிய இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும் அதேவேளையில் வர்த்தக சம்மேளனம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களினூடாகவும் உடனடி நடவடிக்கையினை எடுப்பதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்படும் விசாரணைகள் குறித்து உரிய நடவடிக்கைகள் வெளிநாட்டிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களின் உதவுகையுடன் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவ்வாறே, முதலீடு மற்றும் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய வர்த்தக உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட விசாரணைகள் அவர்களினால் தேவையான உதவுகை வழங்குவதன் மூலம் அவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டதுடன் அவ்வாறே இலங்கையிலுள்ள உரிய நிறுவனங்கள் / அமைச்சுக்கு நெறிப்படுத்தப்பட்டன.

## 6.6. வர்த்தகப் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கான உதவுகை

வர்த்தகம் சார்ந்த பிணக்குகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்குமிடையில் சுமுகமான தீர்வொன்றினைக் காணும் நோக்குடன் வர்த்தக திணைக்களத்தினால் சமரசம் செய்து வைக்கப்படுகின்றன. எடுக்கப்பட்ட நடவடிக்கையானது பாரபட்சமின்றியும் சுமுகமான தீர்வினைக் காணப்பதனை நோக்கமாகக் கொண்டும் பரஸ்பரம் பேச்சவார்த்தைகளினூடாக தீர்வுகள் காணப்பட்டன.

மீளாய்வு காலப்பகுதியில், வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் அத்தகைய 178 முறைப்பாடுகள் கையாளப்பட்டுள்ளன.

## 6.7 வதிவிட விசாக்களுக்கான பரிந்துரை

வெளிநாட்டவர்கள் தமது வியாபார, தொழில்சார் மற்றும் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக இலங்கையில் நீண்ட காலப்பகுதிக்குத் தங்குவதற்கு வதிவிட விசாவிற்கு கோரிக்கை விடுக்கின்றனர். குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களமானது வதிவிட விசாக்களினை

வழங்குவதற்கு வரிசை அமைச்சிடமிருந்து பரிந்துரைகளினைக் கோருகின்றது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர், அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் இலங்கைக்கு வருகை தந்து வெளிநாட்டு கம்பனிகளின் இணைப்பு அலுவலகங்கள் / கிளை அலுவலகங்கள் மற்றும் ஏனைய வர்த்தக மற்றும் வியாபார முயற்சிகளில் ஈடுபடுகின்ற புலம் பெயர்ந்தவர்களுக்கான வதிவிட விசாக்களுக்கான பரிந்துரை கடிதங்களினை வழங்குகின்ற அதிகாரத்தினை வர்த்தக திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது.

வர்த்தக திணைக்களமானது தகைமை வாய்ந்த வெளிநாட்டவர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருக்கும் பணிப்பாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோருக்கு அவர்களின் கோரிக்கையின் பேரில் ஒரு வருட காலப்பகுதிக்கு அவர்களுக்கான வதிவிட விசாக்களுக்கு மற்றும் அவற்றினை நீடிப்பதற்குமான பரிந்துரைக் கடிதங்களினை வழங்கி வருகின்றது. அத்தகைய விசாக்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுமதி வர்த்தகம், தொழில்நுட்ப மாற்றுகை மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு என்பவற்றிற்கான அத்தகைய தொழில்களுக்கு நேரடி நன்மை பயக்கும் வகையிலும் தேசியப் பொருளாதாரத்தற்கு அதன் மூலம் சாதகமான பயன்கள் கிடைக்கும் வகையிலும் காணப்படுகின்றதா என்பது குறித்து கவனமாக மதிப்பீடு செய்யப்பட்டு அத்தகைய விசா விண்ணப்பங்களுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது 146 விண்ணப்பதாரிகள் மற்றும் 80 கம்பனிகளின் 27 தேசிய இனங்களைச் சேர்ந்த 114 தங்கியிருப்போருக்கு குடிபெயர்ந்தவர்களுக்கான வதிவிட விசா பரிந்துரைகளை வழங்கியுள்ளது. முன்னைய ஆண்டான 2016 உடன் ஒப்பிடுகையில், விண்ணப்பதாரிகள் 25 பேராலும், தங்கியிருப்போர் 28 பேரினாலும், கம்பனிகள் 8 இனாலும் தேசிய இனத்தவர்கள் 2 பேரினாலும் அதிகரித்துள்ளனர்.

## 6.8. கடன் முகவராண்மைகளின் அங்கீகாரம்

1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் கீழ், ஏதேனும் கம்பனி, நிறுவனம் அல்லது தனிநபரினை அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவராண்மையாக பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரமானது வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகமானவர்1949 ஆம் ஆண்டின் 6 ஆம் இல. குத்தகை சட்டத்தின் 114(1) ஆம் பிரிவின் கீழ் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இரண்டு ஏனைய உறுப்பினர்களைக் கொண்ட சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.
மீளாய்வு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது 02 விண்ணப்பங்களினை செயல் முறைக்குட்படுத்தியுள்ளது. இவ்வாறு செயல்முறைக்குட்படுத்தப்பட்ட 02 விண்ணப்பங்களில், எந்தக் கம்பனியும் கடன் முகவராண்மை நிறுவனமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.

## 6.9. இலங்கை நோக்கிலான ஊக்குவிப்பு பிரச்சாரம்

வெளிநாட்டு வாங்குனர்களினைக் கவருதல் மற்றும் உலகளாவிய ரீதியில் இலங்கையின் உற்பத்திப் பொருட்களை பிரதிநிதித்துவப் படுத்துதல் எனும் நோக்குடன், வெளிநாடுகளில் உள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் அவர்களுக்குரிய நாடுகளில் பல்வேறு இலங்கை நோக்கிலான நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்திருந்தார்கள். 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அவர்கள் அத்தகைய 102 இலங்கை நோக்கிலான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளார்கள்.

## 6.10. ஐரோப்பிய ஒன்றியம் நிதியிட்ட வர்த்தகத்துடன் தொடர்புடைய திறன் கட்டியெழுப்பும் கருத்திட்டங்கள்

"ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை வர்த்தகம் தொடர்பான உதவுகை: பிராந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளில் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளினை அதிகரித்தல்" கருத்திட்டமானது 18 – ஆவது ஐரோப்பிய ஒன்றிய இலங்கை கூட்டு ஆணைக்குழுவிற்கு சமாந்தரமாக புறுசல்ஸில் ஆம் திகதியன்று நடாத 2 டிசம்பர் 2013ம்தப்பட்ட வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் மீதான ஐரோப்பிய ஒன்றிய – இலங்கை தொழிற்படு குழுவிற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியமானது இக்கருத்திட்டத்திற்காக 8 மில்லியன் யூரோக்களை நிதியிடுவதற்கு உடன்பட்டுக் கொண்டுள்ளதுடன் சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் UNIDO என்பன இக்கருத்திட்டதினை அமுல்படுத்தும் முகவராண்மையாக செயற்படும் அதேவேளையில், இக்கருத்திட்டத்தின் தேசிய இணைப்பாளராக வர்த்தகத் திணைக்களம் விளங்குகின்றது.

கருத்திட்டத்தின் முற்றுமுழுதான நோக்கம், வர்த்தக நோக்கிலான வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒருங்கிணைவு உள்ளடங்கலான இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பினை வழங்குவதன் மூலம், வறுமை ஒழிப்புக்குப் பங்களிப்பினை வழங்குதல்.

பின்வரும் நான்கு பிரதான விடயங்களில் கருத்திட்ட நடவடிக்கைகளினை ஆரம்பித்தல்;

1) ER 1. உலக வர்த்தக நிறுவனம், பிராந்திய ஒருங்கிணைவு செயல்முறை மற்றும் ஐ.ஒ.இன் பொதுவான முன்னுரிமைத் திட்டம் (GSP+) என்பவற்றினால் வடிவமைக்கப்பட்டவாறு கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மறுசீரமைப்புக்கள் மற்றும் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் உள்ளடங்கலாக, ஏற்றுமதி போட்டித்தன்மைக்காக தெளிவான வர்த்தக உபாயத்தினை வடிவமைத்தல் மற்றும் அமுலாக்குதல்.

2) ER 2. விரிவாக்கப்பட்ட குறுக்கு எல்லை வினைத்திறன் நடைமுறைகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் (SMEs) வினைத்திறனை பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய கூட்டமைப்பு(SAARC) மற்றும் ஐ.ஒ.சந்தைகள் போன்றவற்றிற்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற வகையில் விரிவாக்குதல்

3) ER 3. பிராந்திய மற்றும் ஐ.ஒ.சந்தைகளில் தரமான நியமங்கள் மற்றும் சுகாதார மற்றும் சுகாதார நலன் பேணல் சேவை (SPS) நடவடிக்கைகளில் தரத்தினைப் பேணும் பொருட்டு உள்ளக கட்டமைப்பு வசதிகளின் தரம் மற்றும் இணக்கப்பாடு என்பவற்றினை மேம்படுத்துதல்.

4) ER 4. ஏற்றுமதி நோக்கிலான துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் போட்டித்தன்மை அதிகரித்தமை. (வாசனைத் திரவியங்கள், உணவு மற்றும் த.தொ./BPO கைத்தொழில்).

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக திணைக்களமானது பின்வரும நடவடிக்கைகளினை ஆரம்பித்திருந்தது.

- மாநாட்டு அறையில் வீடியோ மாநாட்டு முறைமையினை நிறுவுதல்.
- ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான ஜீஎஸ்பி பிளஸ் வியாபார வழிகாட்டியினை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தல்.

- NTFC வர்த்தக வசதிப்படுத்தலின் கீழ் இலங்கையின் தொழில்நட்பக் குழுவுக்கான வர்த்தக வசதிப்படுத்தல் தொடர்பான இரண்டு பயிற்சி செய்லமர்வுகள் 2017 ஏப்பிரல் 19 – 20 மற்றும் 2017 ஏப்பிரல் 24 – 25 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்டது.
- சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் பயன்பாட்டினை அதிகரித்தல் - சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் தாக்கத்தினை மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டகணிய வர்த்தக மாதிரிகளின் அறிமுகம் – 2017 மே 24 – 24 ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்தப்பட்டது.
- சுதந்திர வர்த்தக பேச்சுவார்த்தை செயலமர்வு – 2017 ஆகஸ்ட் 1-3 இல் கொழும்பில் நடாத்தப்பட்டது.
- வர்த்தகப் பேச்சுவார்த்தை செயலமர்வானது 2017 ஜுலை 24-27 வரையில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டது.
- ஐரோப்பிய வெளியக செயற்பாடு மற்றும் ஜீஎஸ்பி"பிளஸ்: இணக்கப்பாடு மற்றும் பயன்பாடு புருஸல்ஸில் 2017 நவம்பர் 6 – 7 வரையில் நடாத்தப்பட்டது.
- வர்த்தக பொருளாதாரம் மற்றும் வர்த்தக உடன்படிக்கைகள் குறித்த தொழில்நுட்ப திறன் விருத்தியினைக் கட்டியெழுப்பும் பயிற்சியானது (தொகுதி I பயிற்சி) 2017 ஆகஸ்ட் 23-24 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்டது.
- பயிற்சி தொகுதி பகுதி I – "பொருளியல் மற்றும் வர்த்தக விளக்கங்கள் " குறித்த அறிமுகம் (கொழும்பு ஆகஸ்ட் 23-24)
- முன்னுரிமையளிக்கப்பட்டதும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான வர்த்தக வசதிப்படுத்தல் மறுசீரமைப்பு அமுலாக்கமானது 2017 ஒக்டோபர் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்தப்பட்டது.
- வர்த்தக நிவாரணங்கள் குறித்து அறிமுக பயிற்சி அளிக்கும் செயலமர்வானது 2017 ஒக்டோபர் 25 – 27 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்டது.
- சர்வதேச ஆய்வுச் சுற்றுலா லக்ஸம்பேர்க் ஈரோஸ்ரற்றில் நவம்பர் 6 – 10 வரையில் நடாத்தப்பட்டது.
- சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் மிகச்சிறந்த முன்னெடுப்புக்கள் மற்றும் நடைமுறை போக்குகள் தொடர்பான பிராந்திய செயலமர்வுகள் நவம்பர் 6 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்திலும், நவம்பர் 8 ஆம் திகதியன்று கண்டியிலும் நவம்பர் 10 ஆம் திகதியன்று காலியிலும் நடாத்தப்பட்டன.

## 7. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகை

வர்த்தக திணைக்களமானது பின்வரும் முன்னுரிமைத் திட்டங்கள் மற்றும் பிராந்திய இருதரப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான உற்பத்தி நாட்டு சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.

- ✓ முன்னுரிமையின் பொதுவான முறைமை (GSP)
- ✓ வர்த்தக முன்னுரிமையின் பூகோள முறைமை (GSTP)
- ✓ சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)
- ✓ தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)
- ✓ இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((ISFTA)
- ✓ பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ((PSFTA)
- ✓ ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)

வேலை நாளொன்றில் சராசரியாக வர்த்தக திணைக்களத்தினால் 500 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் செயல்முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன. உயர்தரத்தில் பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினைக் கொண்ட குழுவொன்று உற்பத்தி நாட்டுச்சான்றிதழ் வழங்கும் பிரிவில் முழுநேரமும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் முன் அனுமதியின்றி அலுவலக நேரங்களில் உசாவுதல்களும் மேலதிக விளக்கங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. உயர் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர்களினால் தினசரி சராசரியாக 30 முதல் 50 வரையிலான உசாவுதவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையானது வேறுபட்ட உடன்படிக்கைகள்/ஏற்பாடுகளின் கீழான உரிய மூல விதிகளின் வகையீடுகளில் ஆழமான அறிவுடன் விசேடமாக வடிவமைக்கப்பட்டு உயர் தரத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் வர்த்தக திணைக்களம் பின்வருவனவற்றிற்கு பொறுப்பு வகிக்கின்றது;

(அ) வரிச்சலுகைகளுக்கான பொருட்களின் தகமையினை மதிப்பீடு செய்தல்

(ஆ) ஏற்றுமதியாளர்களின் விபரங்களைப் பதிவு செய்தலும் பேணுதலும்,

(இ) தமது தகமையினை நிரூபிப்பதற்காக ஏற்றுமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் செலவுக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய இணை ஆவணங்களை மதிப்பீடு செய்தல்,

(ஈ) முன்னுரிமை வழங்கும் நாடுகளின் கோரிக்கையின் பேரில் உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் வழங்குகையின் பின்னரான கணக்காய்வினை நடாத்துதல் மற்றும்

(உ) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் பகுப்பாய்வுஅறிக்கைகளினை தொகுத்தலும்.

கடந்த 3 ஆண்டுகளில் வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் விபரம் கீழே தரப்படுகின்றது.

| உடன்படிக்கை | 2015 | | 2016 | | 2017 | |
|---|---|---|---|---|---|---|
| | COO களின் எண்ணிக்கை | US $ Mn மொத்த ஏற்றுமதி மதிப்பு | COO களின் எண்ணிக்கை | US $ Mn மொத்த ஏற்றுமதி மதிப்பு | COO களின் எண்ணிக்கை | US $ Mn மொத்த ஏற்றுமதி மதிப்பு |
| EU GSP | 72,675 | 2122.03 | 74,003 | 2,243.51 | 80,867 | 2473.91 |
| GSP Other Countries | 12,465 | 991.32 | 12,495 | 1,150.22 | 12,468 | 1429.47 |
| ISFTA | 11,494 | 407.2 | 12,621 | 375.16 | 12,864 | 442.29 |
| PSFTA | 7,320 | 58.84 | 6,673 | 51.52 | 6,703 | 60.33 |
| APTA | 4,025 | 118.7 | 4,508 | 125.60 | 6,038 | 150.8 |
| SAFTA | 231 | 15.39 | 149 | 6.89 | 679 | 41.07 |
| SAPTA | 304 | 5.26 | 288 | 3.40 | 277 | 4.49 |
| GSTP | 150 | 49.14 | 143 | 45.14 | 100 | 81.2 |
| மொத்தம் | **108,664** | **3,767.88** | **110,830** | **4,001.44** | **120,277** | **4,683.56** |

மூலம்: வர்த்தக திணைக்களம்

இலங்கை சுங்கம்

# 8. வர்த்தக திணைக்களத்தின் பதவியினர் இடநகர்வுகள் - 2017

| அலுவலரின் பெயர் | நகர்வு | திகதி |
|---|---|---|
| **சேவை நிலையங்களின் மாற்றம் – திணைக்களத்திற்கு திரும்பி வருதல்** | | |
| திரு.டி.எம்என்.பி.விஜேரத்ன<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | சுவிற்சலாந்து,ஜெனிவாவிலுள்ள உலக வர்த்தக நிறுவனத்தின் நிரந்தர பிரதிநிதி பதவியிலிருந்து இலங்கைக்கு திரும்பினார். | 02.01.2017 |
| திரு.டீ.டீ.பிரேமரத்ன<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | ஜப்பான்,ரோக்கியோவிலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பினார். | 03.04.2017 |
| திரு.டி.எம்.ரத்நாயக்க<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | தாய்லாந்து பாங்கொக்கிலுள்ள இலங்கையின் கொன்சுலேற் ஜெனரல் பதவியிலிருந்து இலங்கைக்குத் திரும்பினார். | 15.05.2017 |
| திருமதி.எச்.கே.டப்.லியனகே<br>உதவி வர்த்தகப் பணிப்பாளர் | ஜப்பான்,ரோக்கியோவிலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பினார் | 08.06.2017 |
| திருமதி.சி.எம்.ஜீ.ஆர்.சில்வா<br>வர்த்தகப் பணிப்பாளர் | பெல்ஜியம், புருசஸ்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பினார் | 01.07.2017 |
| திரு.டப்.பீ.ஏ.எப்.குணசேகர<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | பிரான்ஸ், பாரிஸிலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பினார் | 10.07.2017 |
| திரு.ஏ.ஜீ.என்.கருணாதிலக<br>வர்த்தகப் பணிப்பாளர் | ஐ.இ. இலண்டனிலுள்ள, இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பினார். | 31.07.2017 |
| திரு,எச்.எம்.பி.ஹேரத்<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | பாகிஸ்தான் காரச்சியிலுள்ள இலங்கைத் கொன்சுலேற் ஜெனரல் பதவியிலிருந்து இலங்கைக்குத் திரும்பினார். | 02.08.2017 |
| திருமதி.எம்.எம்.ரி.டீ.முல்லேகம்கொட<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | சுவீடன் இலங்கைத் தூதரகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பினார். | 08.08.2017 |
| திரு.பீ.கே.எஸ்.பட்டிவில<br>பிரத வர்த்தகப் பணிப்பாளர் | மலேசியா இலங்கை உயர்ஸ்தானிகராலயத் திலிருந்து இலங்கைக்குத் திரும்பினார். | 16.08.2017 |
| திருமதி.ஆர்.மல்லிகாராச்சி<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | சிங்கப்பூர், இலங்கை உயர்ஸ்தானிகராலயத் திலிருந்து இலங்கைக்குத் திரும்பினார். | 22.08.2017 |
| செல்வி.கே.சி.கிரிவந்தல<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | ரஷியா மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பினார் | 17.10.2017 |

| | | |
|---|---|---|
| **சேவை நிலையங்களின் மாற்றம் – வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமனம் செய்தல்** | | |
| திரு.ஆர்.ஜீ.எஸ்.பி.கே.விஜேசேகர<br>வர்த்தகப் பணிப்பாளர் | ஜப்பான், ரோக்கியோவிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டார். | 20.04.2017 |
| திரு.அப்துல் ரஹீம்<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | அவுஸ்திரேலியா, சிட்னியிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரலுக்கு நியமிக்கப்பட்டார். | 11.05.2017 |
| திரு.டப்.ஏ.பி.சிறிமன்ன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | தாய்லாந்து, பங்கொக்கிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டார். | 01.06.2017 |
| திரு.எல்.ஜீ.திசாநாயக்க<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | கனடாவிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரலுக்கு நியமிக்கப்பட்டார். | 26.06.2017 |
| திரு.பீ.ஏ.எஸ்.பொன்னம்பெரும<br>பிரதி வர்த்தகப் பணிப்பாளர் | ஐக்கிய அமெரிக்கா, வொஷிங்டனிலுள்ள இலங்கை கொன்சுலேற் ஜெனரலுக்கு நியமிக்கப்பட்டார். | 01.07.2017 |
| திருமதி.ஈ.ரி.எம்.சி.எஸ்.அபேரத்ன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பிரான்ஸ், பாரிஸிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டார். | 03.07.2017 |
| செல்வி.யூ.சமரதுங்க<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இந்தியா, புதுடில்லியுலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திற்கு நியமிக்கப்பட்டார். | 15.07.2017 |
| செல்வி.டப்.ஜீ.வை.என். குணவர்தன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | சுவீடனிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டார். | 28.07.2017 |
| செல்வி.டப்.எம்.பி.அபேகோன்<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | மலேசியாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திற்கு நியமிக்கப்பட்டார். | 03.08.2017 |
| திருமதி.கே.டீ.என்.கொடிகார<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திற்கு நியமிக்கப்பட்டார். | 16.08.2017 |
| திருமதி.எஸ்.எச்.எஸ்.அரியரத்ன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பெல்ஜியம், புருஸல்ஸிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டார். | 01.10.2017 |
| திரு.ஜீ.எல்.ஞானதேவா<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | பாகிஸ்தான் கராச்சியிலுள்ள இலங்கை கொன்சுலேற்றுக்கு நியமிக்கப்பட்டார். | 07.11.2017 |
| செல்வி.டப்.சீ.கே.பெரேரா<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | ரஷியா, மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு நியமிக்கப்பட்டார். | 08.12.2017 |
| **ஆட்சேர்ப்புக்கள்** | | |
| செல்வி.டப்.ஏ.எஸ்.கே.பெரேரா<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 01.06.2017 |
| திரு.கே.கே.எஸ்.சமீர<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 01.06.2017 |
| செல்வி.ரி.சி.விதானவாசம்<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 01.06.2017 |
| செல்வி.பி.கே.பூமவலாகே<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 01.06.2017 |

| | | |
|---|---|---|
| செல்வி.ஜே.ஏ.சி.ஏ.ஜயவர்தன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 01.06.2017 |
| செல்வி.எம்.டப்.எம்.அபேகோன்<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 01.06.2017 |
| திரு.எஸ்.எம்.எஸ்.ஆர்.பண்டார<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 01.06.2017 |
| செல்வி.ஜீ.கே.சேனாரத்ன<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 28.12.2017 |
| செல்வி.டப்.ரி.எஸ்.பெரேரா<br>உதவி வர்த்தக பணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 28.12.2017 |
| திரு.ஜே.டி.ஹெட்டியாராச்சி<br>உதவி வர்த்தணிப்பாளர் | இலங்கை வர்த்தக திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். | 28.12.2017 |
| **இழைப்பாறல்கள்** | | |
| - | - | - |

## 9. வருடாந்தக் கணக்குகள் - 2017

### தலைப்பு இல.: 295

### அமைச்சு / திணைக்களம்:- வர்த்தக திணைக்களம்

### நிகழ்ச்சித்திட்ட இல.: 01

### கருத்திட்ட இல.: 01

### மீண்டுவரும் செலவினம்

| விபரணம் | 2016<br>உண்மை<br>ரூபா. 000 | 2017<br>மதிப்பீடு<br>ரூபா. 000 | 2017<br>மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு<br>ரூபா. 000 | 2017<br>உண்மைச் செலவினம்.<br>ரூபா. 000 | 2017<br>சேமிப்புக்கள்<br>ரூபா. 000 |
|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 46,969 | 48,100 | 52,750 | 51,357 | 1,393 |
| ஏனையவை | 62,156 | 70,967 | 69,550 | 64,408 | 5,142 |
| மொத்தம் | **109,125** | **119,067** | **122,300** | **115,765** | **6,535** |

| மூலதனச் செலவினம் | | | | | |
|---|---|---|---|---|---|
| செலவின விபரணம் | 2016 உண்மை ரூபா. 000 | 2017 மதிப்பீடு ரூபா. 000 | 2017 மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடு ரூபா. 000 | 2017 உண்மைச் செலவினம். ரூபா. 000 | 2017 சேமிப்புக்கள் ரூபா. 000 |
| **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | 537 | 2,450 | 2,710 | 2,119 | 591 |
| கட்டிடங்களும் பொருத்துக்களும் (2001) | 212 | 2,000 | 2,260 | 2,108 | 152 |
| வாகனங்கள்(2003) | 325 | 450 | 450 | 11 | 439 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | 2,279 | 2,000 | 3,157 | 3,148 | 9 |
| தளபாடமும் அலுவலக உபகரணமும் (2102) | 1,512 | 1,000 | 1,000 | 991 | 9 |
| இயந்திரம் (2103) | 767 | 1,000 | 2,157 | 2,157 | - |
| **மனித வள விருத்தி** | 2,454 | 2,500 | 2,500 | 2,077 | 423 |
| **பதவியினர்** பயிற்சி(2401) | 2,454 | 2,500 | 2,500 | 2,077 | 423 |
| **ஏனை மூலதனச் செலவினம்** | 4,847 | 6,000 | 6,000 | 5,828 | 172 |
| முதலீடுகள் (2502) | 4,847 | - | - | - | - |
| வளர்ச்சிக்கு உதவி(2202) | - | 6,000 | 6,000 | 5,828 | 172 |
| **மொத்தம்** | **10,117** | **12,950** | **14,367** | **13,172** | **1,195** |